
விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-எட்டு Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI




சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 14 சனிக்கிழமை (27.04.2002) தொலைபேசி 3378 ஒலி 129



யாழ் வந்த தென்னிலங்கை சட்டத்தரணிகள் யாழ் மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா, மற்றும் சட்டத்தரணிகளை சந்தித்த போது எடுத்த படம்.

## சமாதான முயற்சிகளை எதிர்க்கட்சிகளுக்கு விளக்க

# சு.ப.தமிழ்ச் செல்வன்

# கொழும்பு செல்வார்!

### சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் தகவல்

(கொழும்பு)

**அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையை அடுத்து எடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் பற்றி தென்னிலங்கை அரசியல் கட்சிகளுக் கும் ஊடகவியலாளர்களுக்கும் விளக்கமளிக்க வருமாறு கொழும்பு சட்டத்தரணிகள் சங்கம் விடுத்த அழைப்பை ஏற்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் கொழும்பு செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது**

(கொழும்பு)

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் தொடர் பாக எதிர்க்கட்சிகளுக்கும் ஏனைய அரசியற் கட்சிகளுக்கும் விளக்கிக் கூறும் பொருட்டு தமிழீழ விடுதலைப்

வரவுள்ளதாக கொழும்பு மஜிஸ் ரேட் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங் கம் தெரிவித்துள்ளது.

நேற்றைய தினம் வன்னிக்குச் சென்ற சட்டத்தரணிகள் சங்கத்தி னர் தமிழ்ச்செல்வனைச் சந்தித்து

துரையாடினர்.

இச்சந்திப்பில், அரசிற்கும் - விடு தலைப் புலிகளுக்குமிடையில் மேற் கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற் சியை இனவாத சக்திகள் குழப்பிய டிப்பதற்கு முயற்சி செய்கின்றன.

## படையினர் வெளியேறினர்

(தென்மராட்சி)

மிருசுவில் அரசினர் வைத்தியசா லையில் முகாம் இட்டிருந்த இரா ணுவத்தினர் அங்கிருந்து வெளியே றியுள்ளனர்.

கடந்த 2000ம் ஆண்டு தென்ம ராட்சிப் பகுதியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளிற்குமிடையில் கடும் சமர் நடைபெற்றபோது இரா ணுவத்தினர் மிருசுவில் வைத்திய சாலையில் முகாமிட்டிருந்தனர்.

தற்பொழுது மக்கள் தென்மராட் சியில் மீளக் குடியேறிவருவதால் வைத்தியசாலையில் இருந்து படை யினரை வெளியேற்றுமாறு மக்கள் கோரியிருந்தனர்.இதற்கு அமைவா கவே படையினர் வைத்தியசாலை யில் இருந்து வெளியேறியுள்ளனர்.

இதே வேளை வைத்தியசாலையை மீள இயக்குவது தொடர்பாகவும்ஆலோ சிக்கப்பட்டு வருகிறது. (இ)

## புலிகளின் பகுதிகளை

## வேவு விமானம் நோட்டம்

(வவுனியா)

ஆட்களற்ற தானியங்கி சிறியரக வேவு விமானம் ஒன்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிப் பிரதேசங்களை வேவுபார்க்கும் வகை யில் வட்டமிட்டதாகத் தெரியவரு கிறது.

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான இவ்வேவு விமானம் சுமார் இரண்டரை மணித்தியாலங்க ளிற்கு மேலாக ஆனையிறவு மற் றும் கிளிநொச்சிப் பகுதிகளை சுற் றிப் பறந்து நோட்டமிட்டதாக அங்கி ருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின் றன. (இ)

## மேலும் 30 புலி உறுப்பினர்கள் இன்று யாழ் வருவர்!

அரசியற் கட்சிகளுக்கும் விளக்கிக் கூறும் பொருட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்த் துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கொழும்புக்கு

சென்ற சட்டத்தரணிகள் சங்கத்தி னர் தமிழ்ச்செல்வனைச் சந்தித்து தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் தொடர்பாக கலந்

சியை இனவாத சக்திகள் குழப்பி டிப்பதற்கு முயற்சி செய்கின்றன.

எனவே இந்த சமாதான முயற்சி தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஏனைய அரசியல் கட்சிப் பிரமுகர்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரிற்கு விளக்கிக் கூறுவது சமாதான முயற்சிகளுக்கு மேலும்

(08ம் பக்கம் பார்க்க)

## இன்று யாழ் வருவர்!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த 30 உறுப்பினர்கள் இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளிற்குமிடையே நிரந்தரப் போர்நிறுத்த புரிந்துணர்வு உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்டு இரு மாதங்கள் கடந்திருக்கும் நிலையில் யாழ் குடா நாட்டில் அரசியல் நடவ டிக்கைகளை விஸ்தரிக்கும் முகமா கவே விடுதலைப் புலிகளின் அரசியல்த்

(08ம் பக்கம் பார்க்க)

### புலிகளின் மட்டு, அம்பாறை

## அரசியல்துறைப் பொறுப்பாளர் கரிகாலன் தென் பகுதி செல்வார்?

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் மட்டக் களப்பு - அம்பாறை மாவட்ட அரசி யல் துறைப் பொறுப்பாளர் கரிகாலன் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிற்குச் செல்வதற்கு அனுமதி கோரியுதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் .சனத் கருணாரட்ண தெரிவித்துள் ளார்.

மட்டக்களப்பு வழியாக தென் பகுதி செல்வதற்கு பாதுகாப்பு தலை மையகத்தில் அனுமதி கோரியதாக வும் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருவதானால்சிவில் உடையுடன் இரண்டு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களுடன் வருமாறு படைத் தரப்பினரால் அறிவுறுத்தப்பட்டதனைத்

(08ம் பக்கம் பார்க்க)

## நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த சட்டத்துறை உதவ வேண்டும்

### சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் வர்ணகுலசூரிய தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டின் சட்டத்துறை வடக்கிற் கும், தெற்கிற்கும் ஒரு பாலமாக இருந்து சமாதானத்தை விரைவில் ஏற்படுத்த வேண்டுமென்று கொழும் பில் இருந்து யாழ்ப்பாணம் வந்தி ருந்த சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் எஸ்.வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து சமாதானம் வேண்டி யாழ்ப்பாணம் வந்திருந்த சட்டத்தரணிகளிற்கு யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கம் வரவேற்பளித்து நேற்றிரவு இராப்போசனம் அளித்து கௌரவித்தது.

யாழ் சட்டதரணிகள் சங்கத் தலைவர் செல்வி சாந்தா அபிமன் னசிங்கம் தலமையில் நடை பெற்ற இவ்வைபவத்தில் பேசும் போதே சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் வர்ணகுலசூரிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் வடக்கிற்கும் தெற்கிற்கும் சமாதானம் ஏற்பட வேண்டு மென் பதை நோக்கமாகக் கொண்டே நாம் யாழ்ப்பாண விஜயத்தை மேற் கொண்டுள்ளோம்.

புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும் என்பதே எமது நோக்கம். இந் நோக்கத்திற் கமைவாக விடுதலைப் புலிகள்

(08ம் பக்கம் பார்க்க)

## நீர்கொழும்பு சிறைக் கைதிகள் நாளைமுதல் உண்ணாவிரதம்

(கொழும்பு)

புதிய குடிவரவு, குடியகல்வு சட் டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு நீர் கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 200 இற் கும் மேற்பட்டவர்களின் பெற்றோர் கள், உறவினர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை அமைச்சர்களின் இல்லங்களை நோக்கிய வாகன ஊர்வலமொன்றை மேற்கொள்ள வுள்ளனர்.

இவ்வாறான ஊர்வலத்தை மேற் கொள்ளவிருக்கும் அதேநேரம் 200 இற்கும் மேற்பட்ட கைதிகளும் அன்றைய தினம் சாகும்வரையிலான உண்ணாவிரதத்தை மேற்கொள்ளவும் முடிவு செய்துள்ளனர்.

(08ம் பக்கம் பார்க்க)

## சோதனைச் சாவடிகளுக்கு கண்காணிப்புக்குழு விஜயம்

(வவுனியா)

இராணுவத்தினருடைய ஓமந் தைச் சோதனைச் சாவடிக்கும் விடு தலைப் புலிகளின் சோதனைச் சாவடிக்கும் நேரில் சென்ற வவு னியா மாவட்ட யுத்த நிறுத்த கண் காணிப்புக் குழு அங்குள்ள நடை முறை பிரச்சினைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுத்துள்ளதை அடுத்து சோதனைச் சாவடிகள் ஊடாக நேற்று முதல் சிரமமற்ற போக்கு வரத்து நடைபெற்று வருவதாக தெரி விக்கப்படுகிறது.

(08ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறுவிளம்பரம்

### தேவை

ஆண்டு11வரையான மாணவர்க்கு தமிழ்கற்பிப்பதற்கு மாலைநேர ஆசிரியர்தேவை தொடர்பு 1மணிக்குப்பின் ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி தலைமை ஆசிரியர் 426(302) காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். (5022)

## யாழ்- வன்னித் தொடர்பால் மலேரியா நோய்த் தாக்கம் மீண்டும் தலைதூக்கும் வாய்ப்பு

(சுதுமலை)

யாழ்- கண்டி வீதி போக்குவரத்திற்கு திறக்கப்பட்டதை அடுத்து, வவுனியா,முல்லைத்தீவு, கிளிநொச்சியிலிருந்து அதிகளவு மக்கள் யாழ்ப்பாணம் வந்து செல்வதால் மலேரியாக் காய்ச்சல் பரவும் சந்தர்ப்பம் உண்டு என்று மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. கணேஸ்வரராஜா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் தற்போது மலேரியா நோய்த்தாக்கம் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டிருக்கின்ற போதிலும்,

வன்னிப் பகுதிக்கான தொடர்பு அதிகரித்திருக்கின்ற நிலையில் மலேரியா மற்றும் மூளை மலேரியாத் தொற்று அபாயம் அதிகம் உள்ளது.

அத்துடன், தற்போது பெய்து வரும் மழை நுளம்புப் பெருக்கத்திற்கு ஊக்கசக்தியாக இருப்பதால்,

சூழல் சுகாதாரத்தைப் பேணுவதுடன், நோய்காப்பு முன்நடவடிக்கைகளைஎடுத்து மேற்படி நோய்த் தாக்கத்தில் இருந்து விடுபடுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (உ- 252)

## கட்டாக்காலி ஆடு, மாடுகளால் தொல்லை

(சங்கானை)

சங்கானை மேற்குப் பகுதி தோட்டங்களில்கட்டாக்காலி ஆடு மாடுகளின் தொல்லை அதிகரித்திருப்பதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (உ-213)

## சேவைக் காலம் நீடிப்பு

(அரியாலை)

கிளிநொச்சி அரசாங்க அதிபர் எஸ். ஐயாத்துரையின் சேவைக்காலம் மேலும் ஒரு வருடத்தால் நீடிக்கப்பட்டுள்ளது. (உ-225)

## விபரம் திரட்டல்

(மந்திகை)

வடமராட்சி கிழக்கு தென்மராட்சி ஆகிய பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்து வசிக்கும் குடும்பங்கள், நிவாரணம் பெறும் குடும்பங்கள் ஆகியவற்றின் விபரங்களைத் திரட்டும் பணியில் வடமராட்சி வடக்குப் பிரதேச செயலகத்தின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தி உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர்.

சம்பந்தப்பட்டவர்களைக் குறித்த சமுர்த்தி உத்தியோகத்தர்களுடன் இது விடயமாகத் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-23)

## மின்சார இயந்திர நிலையம் சுன்னாகத்தில் நிறுவப்படும்

(கொழும்பு)

குடாநாட்டு மின்சார தேவையைப் பூர்த்திசெய்வதற்கு வேண்டிய துரிதநடவடிக்கைகளில் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு ஈடுபட்டு வருகிறது.

இந்தவகையில் 24 மணி நேரமும் மின்சாரம் வழங்குவதற்கு வசதியாக பாரியமின்சார இயந்திர நிலையமொன்று சுன்னாகத்தில்நிறுவப்படவுள்ளது.

20மெகாவோட் சக்தியுள்ள இந்த மின் இயந்திரம் ஜூன் மாதமுடிவுக்குள் நிறுவப்படவுள்ளது.

இதன்மூலம் குடாநாட்டின் மின்சார தேவையை ஜூன் மாதத்திற்குப் பின்னர் ஓரளவு நிறைவேற்றக் கூடியதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-[illegible])

## பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் பளையில் இயங்கும்

(மந்திகை)

பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பணிமனையை அடுத்த மாதம் 10ந் திகதி பளையில் இயக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதேசசெயலர் எஸ். புத்திசிகாமணி தெரிவித்தார்.

நகரசபை, கூட்டுறவுச் சங்க கிளைகள்,பாடசாலைகள்என்பவற்றை இயக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-23)

## குடாநாட்டுபாடசாலைகளின் சுகாதார வசதிகள் குறித்த விபரங்கள் சேகரிப்பு

(சுதுமலை)

யாழ். மாவட்டத்தில்உள்ள ஒவ்வொரு பாடசாலைகளிலும் காணப்படும் சுகாதார வசதிகள் தொடர்பான விபரத்தை அறியத் தருமாறு கொழும்பு குடும்ப சுகாதார சேவைப் பணியகம்சுகாதார வைத்திய அதிகாரிகளைக் கோரியுள்ளது.

மாணவர்கள் தொகை,மலசலகூடங்களின் எண்ணிக்கை குடிநீர் பெறும் கிணற்றின் விபரம், பாடசாலை சுகாதார மன்றச் செயற்பாடு, சுகாதார ஆசிரியர் விபரம் என்பன இதில் அடங்கும். (உ-225)

## சங்காபிஷேகமும் மணிவிழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளையின் மணிவிழாவைஒட்டி இணுவில் கந்தசாமிஆலயத்தில் பேராசிரியர் தம்பதியினருக்கு நீண்டஆயுளைவேண்டி நாளைக்காலை 10மணிக்கு சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

சங்காபிஷேகத்தை அடுத்து அன்றுமாலை இணுவில் ஸ்ரீ பரராச சேகரப்பிள்ளையார் ஆலய திருமண மண்டபத்தில் இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர் இரா.சுந்தரலிங்கம் தலைமையில் மணிவிழா நடைபெறவுள்ளது. (வ)

## பஸ் சேவை தொடர்பான மற்றோர் பேச்சுவார்த்தை அடுத்த வாரம்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான தனியார் பஸ் சேவையை ஆரம்பிப்பது தொடர்பான மற்றுமொரு பேச்சுவார்த்தை அடுத்தவாரம் நடைபெறவுள்ளது.

இதேவேளை புலிக்ளின் அழைப்பின் நிமிர்த்தம்கடந்த புதன்கிழமை வன்னியில் நடைபெற்ற பேச்சுக்களின் போது தமது நிலைமைகள் பற்றி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எடுத்துக்கூறியுள்ளதாக தனியார் பஸ்போக்குவரத்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் விஜயரத்தின தெரிவித்துள்ளார் (உ-9)

## இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும்

(ஈச்சமோட்டை)

யாழ் புனிதசாள்ஸ் மகாவித்தியாலய பழைமாணவர் சங்கத்தினால் பாடசாலையின்125ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு இளம்வீரர்களை ஊக்கிவிக்கும் முகமாக நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெற் சுற்றுப் போட்டி இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

மாலை 3.30 மணிக்கு மத்தியூஸ் வீதியில் உள்ள புனித சாள்ஸ் ஆரம்பப் பாடசாலை மைதானத்தில் இடம் பெறவிருக்கும்மேற்படி இறுதி ஆட்டத்தில் ''வில்ஸ்'' விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ''யாழ். கல்வி நிலைய'' விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மேற்படி நிகழ்வில் காட்சி ஆட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது இதில் கொழும்புத்துறை சென் ஜோசப் மகாவித்தியாலய அணியும் யாழ்புனிதர்சாள்ஸ் மகாவித்தியாலய அணியினரும் மோதவுள்ளனர்.(உ-59)

## விருப்பத்தை

பட்டு வருகிறது.

வடபகுதியில் இருந்துசுமார் 70 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்து புத்தளம் குருநாகல்,அநுராதபுரம்மற்றும் பிற மாவட்டங்களில் தற்காலிகமாக வாழ்ந்துவருவது குறிப்பிடத்தக்கது. (உ)

## மண்சரிவில்மரணமானோர் எண்ணிக்கை உயர்வு

(கொழும்பு)

தெமோதர மண்சரிவில்உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நான்காக உயர்ந்துள்ளது.

மண்சரிவில் மேலும் பலர் சிக்கியிருக்கலாம் எனவும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடத்திற்கு அண்மையில் கல்லுடைக்கும் குவாரி உள்ளதால் அடிக்கடி வெடி வைத்து கற்பாறைகள் தகர்க்கப்படுவதாலேயே மண்சரிவு ஏற்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை இவ்வாறான மண்சரிவுகள் இப்பகுதியில் இன்னும் ஏற்படும் வாய்ப்புக்கள் இருப்பதாகவும் கூறப்படுகிறது. (உ-3)

## புலிகளின் பெயரைக்கூறி கப்பம் பெற முயன்ற மூவர் கொழும்பில் கைது!

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் என்று தம்மைக் கூறுக்கொண்டு கப்பம் பெற முயன்ற மூன்று பேரை பொலிஸார் கைது செய்துள்ளார்.

கொட்டாஞ்சேனைப் பகுதியில் உள்ள விடுதியொன்றில் பெரும்தொகைப் பணத்தை கப்பமாகப் பெற இவர்கள் முயற்சி செய்துள்ளனர்

இவர்கள் பயன் படுத்திய தாக்கக் கூறப்படும் வாகனம் ஒன்றும் செலூலர் தொலைபேசி இரண்டும் கைப்பற்றப் பட்டுள்ளது (உ-5)

## விடுதலைப் புலிகளால் விழிப்புக் கூட்டங்கள்

### வவுனியா மாவட்டத்தில் நடத்தப்படுகிறது

(வவுனியா)

தமிழ் மக்களிடம்சமூககலாசார விழுமியங்களைக் கட்டியெழுப்பும் நோக்கில் வவுனியாவிலுள்ள கிராமங்கள் தோறும் தமிழீழ விடுதலைப் புலிகள் விழிப்புக் கூட்டங்களை நடத்தி வருகின்றனர்.

வவுனியாவில் கோவில் குளம், பண்டாரிக்குளம் வைரவபுளியங்குளம்,பட்டாணிச்சியர், புளியங்குளம், வெளிக்குளம, வவுனியா வடக்கு ஆகிய இடங்களில் விழிப்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன இக்கூட்டங்களை மக்களேஏற்பாடுசெய்து வருகின்றனர். (உ-3)

## வட - கிழக்கில் ஆசிரிய நூலகர் நியமனம் உடனடிச் சாத்தியமில்லை

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கு மாகாண பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை தீவிரமாக உள்ளதால் ஆசிரிய நூலகர்களாக தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்களை விடுவிக்க முடியாத நிலையில் உள்ளதாக வலயக் கல்விப்பணிப்பாளர்கள் மாகாணக் கல்விப்பணிப்பாளருக்கு அறிவித்துள்ளனர்.

ஆசிரிய நூலகராக தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் அனைவரையும் விடுவித்தால் பாடசாலையில் கற்பித்தல் பணியினை மேற்கொள்ள ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதுடன், இதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கை பாதிக்கப்படும்.

விடுவிக்கப்படும் ஆசிரியர்களுக்குப் பதிலாக புதிய ஆசிரியர்களை நியமனம் செய்யும் நிலை வடக்குக் கிழக்கு மாகாணத்தில் தற்போதில்லை.

எனவே ஆசிரிய நூலகர்களை நியமனம் செய்வதில் அவசரம் காட்டாது புதிய நியமனங்கள் இடம் பெறும் போது கவனம் செலுத்துமாறு வலயக்கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர். (உ-3)

## பாடசாலைகள் புனரமைப்புக்கு ஆசிய அபிவிருத்திவங்கி நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் வடமராட்சிப் பகுதியில் உள்ள 4பாடசாலைகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

உடுத்துறை மகாவித்தியாலயம், செம்பியன்பற்று ஜீ. ரி. எம். எஸ், மருதங்கேணி இ. த. க. வித்தியாலயம், ஆளியவளை சி.சி.த.க. வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

யுத்தத்தினால் சேதமடைந்த மேற்படி பாடசாலைகளின் கட்டடங்களைப் புனரமைத்தல் மற்றும் மாணவர்களுக்கு வேண்டிய தளபாடங்கள் கொள்வனவுக்கே ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவியை வழங்கவுள்ளதாக மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப. வேலாயுதபிள்ளை தெரிவித்தார்.

இதேவேளை,மேற்படிபாடசாலைகள் அடுத்த தவணையில் இருந்து மீள இயங்கவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ- 43)

## பள்ளிவாசல் குண்டு வெடிப்பில் பன்னிருவர் பலி; பலர் படுகாயம்

### பஞ்சாப் மாநிலத்தில் சம்பவம்

பஞ்சாப் மாநில பள்ளிவாசலில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பெண்கள் குழந்தைகள் உட்பட 12 பேர் பலியாகியுள்ளனர் நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினமிரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பல்லாயிரக் கணக்கானோர் குழுமியிருந்த வேளை இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றதாயினும் 12 பேர் மட்டுமே உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்குண்டுவெடிப்புதொடர்பாக இடம்பெற்ற விசாரணைகளில் இதன் சூத்திரதாரிகள் யார் என இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கிடையில் கி.பி 680 ஆம் ஆண்டு பல்லாயிரக் கணக்கானவர்கள் தீவிரவாதிகளால்கொலை செய்யப்பட்டதை நினைவுகூரும்வைபவம் ஒன்றிலே இக்குண்டு வெடிப்பு இடம் பெற்றுள்ளதாக தெரியவருகிறது. (உ-7)

# தமிழ் ஆசிரிய கலாசாலைகள் மூடப்பட்டதால்
# வாண்மைப் பயிற்சியின்றி கல்வி பாதிப்புற்றது

பேராசிரியர்

**சபா. ஜெயராசா**

இலங்கையில் ஆசிரியர் கல்விதொடர்பான கொள்கையாக்கத்தில் எமது பண்பாட்டுப் பின்புலத்தில் முன்னோடியாகவிளங்கியவர்கள் இருவர். ஒருவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆசிரியர் நல்லொழுக்கமுள்ளவர்களாயும், நூலறிவு நிரம்பியவர்களாயும் ம'ண வர்களது உள்ளத்திலே நல்லறிவைப் பசுமரத்தாணி போன்று பதியவைப்பவர்களாயும் இருத்தல்வேண்டும் என்பது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் கருத்து (நாவலர் பிரபந்தத்திரட்டு.)

ஆசிரியர் என்றும் மாணவர்களாகஇருந்து தொடர்ந்து கற்றுக்கொண்டிருத்தல் வேண்டுமென்றும், மாணவர்கள் பின்பற்றத்தக்க முன்மாதிரியாக அவர்கள் விளங்க வேண்டுமென்றும் சேர்பொன் இராமநாதன் கூறினார்.

இளைஞர் காங்கிரஸ்

இவ்விருவரது கருத்துக்களும் பின்னர் நிலைபேறுகொண்ட சைவ வித்தியாவிருத்திச்சங்க ஆசிரியத்துவ மரபுகளிலும், இந்துக் கல்லூரி மரபுகளிலும் ஆழ வேரூன்றியிருந்தன. பின்னர் வளர்ச்சிபெற்ற காந்திய கல்விச்சிந்தனைகள் இந்நாட்டின் ஆசிரியத்துவ ஆக்கத்தில் ஆழ்ந்த சுவடுகளைப் பதித்தன.

மேலை நாடுகளில் வளர்ச்சிபெற்ற மானுட வாதச் சிந்தனைகளும், இந்திய மரபிலே முகிழ்ந்த காந்தியச் சிந்தனைகளும் இந்நாட்டின் கல்விமான்களிடத்தும் ஆசிரியர்களிடத்தும் செல்வாக்குகளை ஏற்படுத்தின.

கல்வி வாயிலான விடுதலை கல்விவாயிலான சமூக அசைவியம் (Social Mobilty) கல்வியைக் கருவியாகக்கொண்டு வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல், பண்பாடுகளையும் விழுமியங்களையும் கையளிப்பதற்குக் கல்வியைக்கையாளுதல் முதலியவை இந்நாட்டின் ஆய்வறிவாளர் மத்தியிலே விரவிநின்ற கல்விக்கருத்துகளாகும். இக்கருத்துக்கள் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் முன்வைத்த முன்மொழிவுகளிலே துலங்குகின்றன.

செயல் வீச்சுமிக்க ஓர் ஆசிரியர் எவ்வாறு காணப்படுவார் என்பதுபற்றிய கட்டளைகளைக் கல்வியியலாளர்கள் அவ்வப்போது விளக்கியுள்ளனர். ஒருசிறந்த ஆசிரியரின் கற்றல்மட்டங்கள் தொடர்ந்து அதிகரித்துச்செல்லும் கற்பித்தல்வினைத்திறன் காரணமாகமாணவர் பங்குபற்றலும் வரவும் அதிகரித்த வண்ணமிருக்கும். கற்கும் மாணவரின் இடைவிலகலும், சித்தியின்மை விழுக்காடும் மிக அபூர்வமாகவேயிருக்கும். மாணவரின் சுய வெளிப்பாடுகள் மிக விரிவான முறையிலே தூண்டப்பெறும். ஆசிரியர் வராதவேளையிலும், குறித்த ஆசிரியரின் படிமத்தின் வீச்சில் சுயமான கற்றல்நிகழ்ந்து கொண்டிருக்கும்.

ஆசிரியத்துவ உருவாக்கம்

வரலாற்று நோக்கில் வயது மூப்பு; அனுபவ மூப்பு என்பவற்றில் இருந்தே ஆசிரியத்துவம் உருவானது. ஆண்டான் அடிமை முறைச் சமூகத்தில் ஆசிரியத்துவம் வலுப்பிரயோகத்துடனும் அதிகாரப் பிரயோகத்துடனும் இணைந்து கொண்டது. ஒடுக்குவோர் ஒடுக்கப்படுவோர் என்றசமூக இரு நிலைத்துருவமாக்கல் நிகழ ஒடுக்கு முறைமைக்குச் சாதகமான ஆசிரியத்துவம் ஒருபுறமும், ஒடுக்கப்படுவோர் மீட்சிக்குரிய ஆசிரியத்துவம் எதிர்ப்புறமுகமாக வளரலாயின. இவ்வாறான இரு நிலை மரபு இன்றுவரை உலகில் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது.

ஒடுக்குமுறையை நியாயப் படுத்தும் ஆசிரியத்துவம்

1) மாணவரைத் தெறிசிந்தனையற்ற வெறும் நுகர்வோராக மாற்றுதல்.

2) மாணவரின் சுயாதீன சிந்தனைகளை முறியடித்தல்.

3) அச்சில்வார்த்துஎடுத்தல் போன்ற ஒரேவிதமான சிந்தனையை மாணவரிடத்து வளர்த்தெடுத்தல்.

---

இலங்கையில் ஆசிரிய வாண்மைபற்றிய தந்தை செல்வா நினைவுச் சொற்பொழிவுத் தொகுப்பு.

---

4) ஆசிரியரும் மாணவரும் இணைந்து கற்போராய் இருக்கும் நிலையை மறுத்தல்.

5) கற்பித்தற் செயற்பாட்டின் அகப் பொருளாக ஆசிரியரை அமைத்து எல்லைநிலையில் மாணவரை வைத்தல்.

6) யதார்த்த உலகு பற்றிய உருத்திரிந்த காட்சிகளை மாணவருக்கு வழங்குதல்.

7) நடப்பியல் முரண்பாடுகள் மாணவருக்கு உணர்த்தப்படாது, போட்டி உணர்வுகளுக்குள் மாணவரைத் தங்க வைத்து விடுதல்.

8) அடாத்துக்களை மாற்றியமைக்கும் அறிக்கையும் வல்லமையும் மாணவரிடத்துஉருவாக்கப்படாதிருத்தல்.

9) கல்வியையும், வாழ்க்கையையும் ஆக்கமலர்ச்சி செயற்பாடாகக் கருதாது பொறி முறைச்செயற்பாடாக உணரும் நிலையை வளர்த்தல்.

10) பிரச்சினைகளுக்குமுகங் கொடுக்காது, அந்நியமயமாகும் உளக்கோலங்களைஉருவாக்குதல்.

11 உசாவல் விருப்பை (Curiosity) வளர்க்காது உரைத்தவற்றை மீள ஒப்புவிக்கும் நிலையை வளர்த்தல்.

12) பொது மக்கள் மொழியை அடுக்கமைப்பில் தாழ்ந்ததாக்குதல்.

13) அறவொழுக்கங்களையும், கல்வியையும் வேறுபடுத்திப் பார்த்தல்.

14) நிலை மாற்றத்தை முதன்மைப்படுத்தாது நியமிக்கப்பட்ட சட்டமைப்புக்குள் ஒடுங்கச் செய்தல்.

15) தன்முனைப்புக் கற்றலின் நம்பிக்கை அளவைக் குறைத்து விடுதல்.

இலங்கையைச் சிறப்பாகக் கொண்டு நோக்கும் பொழுது ஆசிரியம் தமது செயலாற்றுகையில் இருந்து நலிவு பெறுவதற்கான நிகழ்ச்சிகளும் இலங்கையின்சுதந்திரகாலத்திலிருந்து படிப்படியாகநிகழ்ந்து வந்துள்ளன. ஒரு புறம் வலுவூட்டும் செயற்பாடுகளும் மறுபுறம் நலிவூட்டும் செயற்பாடுகளும் ஏககாலத்தில் நிகழ்ந்து வந்துள்ளன.

நலிவூட்டும் செயற்பாடுகள்

1) சுதந்திரகாலத்திலிருந்து விரிவும் பலமும் பெற்றுவந்த கல்விநிர்வாகக் கட்டமைப்பு ஆசிரியத்துவத்தின் மீதான மேலாதிக்கத்தைப் பழுவை படிப்படியாக அதிகரிக்கச் செய்து வந்துள்ளது.

நிர்வாகிகளாகப் புடை பெயரும் இலட்சியங்கள் ஆசிரியர்களிடத்து வலுவூட்டப்பெற்று வந்துள்ளன.

3) ஆசிரிய சேவை கல்விநிர்வாக சேவையிலும் பார்கக அந்தஸ்து குறைந்தது என்ற மாயை உருவாக்கப்பட்டமை.

4) ஆசிரிய சேவைக்குரிய உளச்சார்பும், அர்ப்பணிப்பும் அற்றவர்கள் ஆசிரியதுவத்துள் நுழைந்தமை.

வாண்மை நிலையில் தாக்கங்களை ஏற்படுத்துதல்.

(5) ஆசிரியத்துவத்தில் ஏற்பட்ட பன்முகப் பாங்கும் அதிகவீச்சும் காரணமாக ஒரு சில ஆசிரியர்களிடத்துக் காணப்படும் எதிர் மறைப் பாங்கு அனைத்து ஆசிரியர்கள் மீதும் பொதுமைப்படுத்தப்பட்டும் விரிவுபடுத்தப்பட்டும் வருகின்ற நிலை வளர்ச்சியடைதல்.

(6) பிரத்தியேகமான தனியார் கல்வி நிலையங்கள் பாடசாலைகளுக்குச் சமாந்தரமாக இயங்கிவருதல், பாடசாலை ஆசிரியர்களுக்குரிய பொறுப்பியத்தையும் (Accountability) அதேவேளை வெகுமதியையும் குறைத்து வருதல்.

(7) பாடசாலைகளில் ஆசிரியர்களுக்குப் பொருத்தமற்ற வேலை ஒதுக்கீடுகளை வழங்குவதால் கீழ் உழைப்பு ஏற்படுதல்.

(8) வளங்கள் போதுமானதாக இல்லாதிருக்கும் நிலையில் புதிய முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தும் படி ஆசிரியர் நிர்ப்பந்திக்கப்படுதல்.

(9) தெறித்தல் சிந்தனை (Reflective Thought) திறனாய்வு அணுகுமுறை (Critical Approach) கொண்ட ஆசிரியர்கள் தனித்து ஒதுக்கப்படும் அபத்த நிலை காணப்படுதல்

ஆசிரியர்க்குரிய வேலை அளவுகளில் எண்ணளவான அதிகரிப்பு ஏற்படுவதனால் பண்பளவு முன்னேற்றங்களை (Ta) எட்டு கடினமாகவுள்ளமை.

பள்ளிக்கூட தேசியமயமாக்கலும் ஆசிரியத்துவமும்

இலங்கையில் பள்ளிக்கூடங்களையும், ஆசிரியகலாசாலைகளையும் 1960 ஆண்டில் அரசாங்கம் பொறுப்பேற்க விளைந்தபொழுது, அதனை அமரர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களும் தமிழரசுக்கட்சியினரும்நியாயபூர்வமாக எதிர்த்தனர். அதற்குப் பின்னர் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் அந்த எதிர்ப்பின் தீர்க்க தரிசனத்தைப் புலப்படுத்தின. கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை, நல்லூர் ஆசிரிய கலாசாலை, திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை முதலியவை அரசாங்கத்தினால் தொடர்ந்து மூடப்பட்டன.

தென் இலங்கையில் இயங்கிய பல தமிழ்ப் பாடசாலைகள் 'மீள் ஒழுங்குபடுத்துதல் என்ற கௌரவமான தொடரின்கீழ் மூடப்பட்டன. இன்றும் தென்-இலங்கையில் சில தமிழ்ப் பாடசாலைகள் தமிழ்மொழி தெரியாத அதிபர்களின் கீழ் இயங்கி வருதல் குறிப்பிடத்தக்கது.

தமிழ் மொழிமூல ஆசிரிய கலாசாலைகள் மூடப்பெற்றமையால் இன்றும் எமது ஆரம்பப் பாடசாலைகளில் எதுவித வாண்மைப்பயிற்சியுமற்ற ஆசிரியர்களே பெருமளவில் கடமைபுரிகின்றனர். இதனால் பாடசாலைக்கல்வியின் அடித்தளம் பெருமளவு பாதிப்புக்கு உள்ளாகிக் காணப்படுகின்றது.

ஆசிரிய வாண்மைப் பயிற்சி

1972 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கல்விச் சீர்திருத்த நடவடிக்கைகள் அனைத்து ஆசிரியர்களும் வாண்மைப் பயிற்சி பெற வேண்டுமென வலியுறுத்தியமை ஒருமுற்போக்கான நடவடிக்கையாயினும் நடைமுறையிலே பலகுறைபாடுகள் காணப்பட்டன.

பணியிலேசேர்ந்துபல ஆண்டுகளுக்குப்பின்னர் வாண்மைப் பயிற்சி தருவதால்எதிர்பார்த்த பயன்களைப்பெற முடியாதிருந்தது.

கல்வியின் உள்ளடக்கமாகிய கலைத்திட்டத்தில் பலமாற்றங்களும், புதுமைகளும் ஏற்படுத்தப்பட்ட போதிலும் ஆசிரியகலாசாலைகள் பழைய பாடத்திட்டங்களின் அடிப்படையில் இயங்கிக்கொண்டிருத்தல்

ஆசிரியர் பணிக்கு முன்னைய பயிற்சியும் வினையாற்றல் கொண்டதாகவும் தரமுடையதாகவும் அமையவில்லை.

ஆசிரியர் பயிற்சியில் பணியாட்சிப் பண்புகளே மேலோங்கியிருத்தல்.

இன்றைய நிலையில் ஆசிரியர் வாண்மையில் பல்வேறு அபிவிருத்திகளும் நெருக்கடிகளும் காணப்படுகின்றன.

## கலந்துரையாடல்

(கொழும்பு)

தற்போது எடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் மத்தியில் பிரஜைகளாகிய எமது பாத்திரம் எனும் தலைப்பிலான கலந்துரையாடலொன்று இன்று மொறட்டுவ மெதடிஸ் தேவாலய கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது (உ)

## அமைச்சர் மருந்தகத்தைப் பார்வை

(சுதுமலை)

நவாலியில் தனியார் கட்டடத்தில் இயங்கிவரும் மானிப்பாய் மத்தியமருந்தகத்திற்கு சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன அண்மையில் விஜயம் செய்தார்.

வைத்தியசாலையில் உள்ள குறைகளை அவதானித்த அமைச்சர் வைத்திய சாலைப் பொறுப்பதிகாரியுடன் இது தொடர்பாகக் கலந்துரையாடினார்(உ-552)

## பரீட்சார்த்த படகுச்சேவை

(நெடுந்தீவு)

நெடுந்தீவுக்கும் குறிகட்டுவானுக்கும் இடையில் போக்குவரத்து சேவையை மேம்படுத்தும் நோக்குடன் நெடுந்தீவுப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் பரீட்சார்த்த படகுச்சேவையை ஆரம்பித்துள்ளது. இதன் பிரகாரம் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் நெடுந்தீவிலிருந்து காலை 6.45 மணிக்கும் பிற்பகல் 4 30 மணிக்கு குறிகட்டுவானிலிருந்தும் படகுச்சேவை இடம்பெற்று வருகிறது. (உ-249)

## ஏ-9 பாதை 6 நாட்கள் திறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்-கண்டி ஏ-9 பிரதான பாதையில் அமைந்துள்ள முகமாலைச் சோதனைச்சாவடி ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த வாரத்தில் ஏனையநாட்களில் காலை 8 00 மணி முதல் மாலை 5.00 மணிவரைக்கும் திறந்திருக்கும் எனவே முகமாலைச் சோதனைச் சாவடியூடாக பயணம் செய்யவரும் சகல பயணிகளும் மேற்குறிப்பிட்டுள்ள நேரத்தில் மாத்திரம் சமுகமளிக்கவேண்டும் என பலாலி இராணுவமுகாம் ஊடகத்துறைப் பிரிவு கட்டளை அதிகாரி அறிவித்துள்ளார். (உ)

# இனப் பிரச்சினையைத் தீர்க்க திடமான மனஉறுதி வேண்டும்

## பிரதமர் ரணில் உரை

(கொழும்பு)

தற்போது எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளிலிருந்து நாடு விடுபடும் என்பதில்தான் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மகாராஜா கூட்டு நிறுவனங்களின், அதி சிறந்த நிறைவேற்று அதிகாரியை தெரிவு செய்யும் முகமாக பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பிரதமர்மேலும்கூறுகையில்;

சவால்கள் இல்லாத நேரமும் உள்ளது. ஆனால் சவால் வரும் போது அதை எதிர்கொள்ள நீங்கள் தயாரா? துரதிஷ்ட வசமாக எமது நாட்டில் கடந்த சில ஆண்டுகளாக இது குறைவாகவே உள்ளது.

நாம் சவால்களிலிருந்து தப்பி கொள்கின்றோம் இந்நிலையில் ஒரே மக்களாகஒரே நாட்டில் வாழ்வதை எவ்வாறு உறுதி செய்யலாம்.

யுத்தத்தால் எவருக்கும் வெற்றியில்லை எனத் தெரிந்தும் இனப்பிரச்சினையை எவ்வாறு முடிவுக்கு கொண்டு வருவது?

சர்வதேச அபிப்பிராயங்கள் மதிக்கப்பட வேண்டும் என்பதை எப்போது புரிந்து கொள்ளப்போகிறோம்.

நாம் இவை அனைத்தையும் கவனத்தில் கொள்ளாமல் 'தீக்கோழிகள்' போல எமது தலைகளை மண்ணுக்குள் புதைத்துக் கொண்டுவாழ முயற்சித்தோம்.

அதற்கான விலையை நாம் கொடுத்து விட்டோம்.

எனவே, நாம் இப்போது இனப்பிரச்சினை என்றபாரிய பிரச்சினையைஎவ்வாறு தீர்ப்பது என்பதில் மட்டுமன்றி முதல் தடவையாக பொருளாதாரத்தில் பின்னடைவுப் பிரச்சினைக்கும் முகம் கொடுக்கின்றோம்.

இவற்றையெல்லாம் தீர்ப்பதற்கு திடமான மன உறுதி வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ-9)

# தந்தை செல்வாவின் அஹிம்சைப் போராட்டத்திற்கு மதிப்பளித்திருந்தால் அழிவும், அவலமும் ஏற்பட்டிராது

தந்தை செல்வாவின் நினைவு தினத்தை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

1948-49 ஆம் ஆண்டுகளில் மலையகத் தமிழரின் ஏழு பிரதிநிதிகள் பிரஜாவுரிமைச் சட்டத்தின் விளைவாக பாராளுமன்ற அங்கத்துவத்தை இழந்ததோடு, மலையகத் தமிழர்களும் அரசியல் அநாதைகளாக்கப் பட்டனர். இதனையடுத்து தந்தை செல்வநாயகம் அவர்கள் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசிலிருந்து பிரிந்து, 1948-12-10ல் 'இன்று இந்தியத் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது. நாளை மொழிப்பிரச்சினை வரும்போது இலங்கைத் தமிழ் மக்களுக்கும் இதே கதி நேரிடும். எனவே, இன்றே நாம் எல்லாம் ஒன்று சேர்ந்து இவ்வநீதியை எதிர்க்க வேண்டும்' என்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது கூறினார்.

சமஷ்டி அரசு

'தமிழ் மக்களின் அபிலாஷையை ஒரு பூரணமான சமஷ்டி அரசியலில் தான் பெறமுடியும் என்றும், தனியான தேசிய இனங்களுக்குரிய சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தீர்க்கத் தகுதியுண்டென்றும்' 1949-12-18ந் திகதி இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்து வைத்துக் கூறினார். அப்போது 'எமது தமிழ் மக்கள் தம் எதிர்காலத்தைப் பற்றிக் கொண்டிருக்கும் உறுதியான அரசியற் கொள்கையே எமக்குச் சாதகமான பெரிய சக்தியாகும். யாம் சிறந்த முறையில்-நம்பிக்கைக்குரிய ஊழியர்களுடன் ஒரு கட்சியை அமைப்போமானால், எமது மக்கள் எம்மைக் கட்டாயம் ஆதரிப்பார்கள். சென்ற காலங்களில் தலைவர்களின் உறுதியற்ற நிலையே எமது பலவீனத்துக்குக் காரணமாயிருந்தது. இக்குறையை நிவர்த்தி செய்தாலன்றி, எமது கட்சி தோல்வியுறும். ஐரிஸ் தேசிய வாதிகளைப் போல சுதந்திரத் தமிழ் அரசு நிறுவப்படும் வரை 'பதவி ஏற்கவே மாட்டோம்' என்று வாக்குறுதி அளிக்கும் உண்மை ஊழியர்களே எமது கட்சியில் இருத்தல் வேண்டும். உள்ளத்தில் ஒரு நோக்கமும், பேச்சில் ஒரு நோக்கமுமாக நாம் இருத்தல் ஆகாது. செல்வத்திற் குறைந்த எங்களுக்கு வலிமை பொருந்திய நண்பர்களும் இல்லை, நேர்மையையும், மன உறுதியையும், இலட்சியத் தூய்மையையுமே நாங்கள் ஆயுதங்களாகக் கொள்ள வேண்டும்' என்று உறுதிபடக் கூறினார்.

சத்தியாக்கிரகம்

**வசந்தாமணாளன்**

அன்று இதற்குப் போராட அவர் தேர்ந்தெடுத்த பாதை அஹிம்சை நெறி. இந்த அஹிம்சை நெறியைக் கடைப்பிடித்து 'ஈழத்துக் காந்தி' யென்று கௌரவமாக அழைக்கப்பட்டார். 1956 இல் தனிச் சிங்களச் சட்டத்தை எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயக்க நிறைவேற்றிய போதுஅதனை, எதிர்த்துத் தந்தை செல்வாவும் தொண்டர்களும் அன்றைய பாராளுமன்றம் அமைந்திருந்த காலிமுகக் கடற்கரையில் சத்தியாக்கிரகம் மேற்கொண்டு சிங்களக் காடையர்களால் கொடூரமாகத் தாக்கப்பட்டார்கள். 1961 இல் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தந்தை செல்வாவின் தலைமையில் நடைபெற்ற சத்தியாக்கிரகம் ஈழத்தமிழரின் அரசியல் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும். மூன்று மாதம் அரச நிர்வாகம் இப்பகுதியில் ஸ்தம்பித்தது. தமிழரசு தபாற்சேவை ஆரம்பிக்கப்பட்டது. ஆத்திரமடைந்த அரசு இராணுவ பலாத்காரத்தினால் அஹிம்சைப்போராட்டத்தை முறியடித்தது. சத்தியாக்கிரகம், ஹர்த்தால், கதவடைப்பு, கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் என்ற வழிகளில் போராடிச் சிறை வாசமும் அனுபவித்த செல்வா 1976 இல் பிரிந்து போவது தான் இனி வழி என்று பாராளுமன்றத்தில் உரையாற்றினார். சாத்வீகப் போராட்டம் பலன் தராது என்று சிந்திக்கத் தொடங்கிய இளைஞர்கள் பேரவை அமைத்துச் செயற்பட ஆரம்பித்தார்கள். ஆயுதப்போராட்டம் தலையெடுத்தது. இதன் விளைவே யுத்த நிலை விஸ்வரூபம் எடுக்கக் காரணமாயிற்று.

தமிழ்த் தேசபிதா

தந்தை செல்வாவின் போராட்டத்திற்கு மதிப்பளித்து அவரது காலத்திலேயே அவரது சித்தாந்த அடிப்படையில் இனப்பிரச்சினையைத் தீர்த்திருந்தால் பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலிகொள்ளும் யுத்தத்தினைத்தவிர்த்துக்கொண்டிருக்கலாம். எனத் தென்னிலங்கையிலுள்ள புத்தி ஜீவிகளும், அரசியல் வாதிகளும், வர்த்தகப் பிரமுகர்களும் இன்று சிந்திப்பதொன்றே அவரைத் தமிழ்த் தேசபிதா என்ற நிலைக்கு உயர்த்தியுள்ளது. கடந்த கால் நூற்றாண்டு காலமாக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள், சட்டதிட்டங்கள்ஒருஜனநாயக நாட்டின் அரசியல் கலாசாரத்தையே முற்று முழுதாக மாற்றிவிட்டது எனலாம்.

# சமாதானம் நிலைக்குமென்று நயினை வந்த சிங்களமாது கலையாடி வாக்குச் சொன்னார்

**நா. கோபாலகிருஷ்ணன்**

**நயினாதீவு**

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையை அடுத்து தென்னிலங்கைச் சிங்கள மக்கள் நயினாதீவு பௌத்த விகாரைக்கு யாத்திரையை மேற்கொண்டு பெரும் எண்ணிக்கையில் வருகை தந்த வண்ணம் உள்ளனர். பௌத்த விகாரை வழிபாட்டைமுடித்த பின் நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்திலும் வழிபட்டுச் செல்கின்றனர்.

சிங்களயாத்திரிகர்கள்

19. 4. 2002 வெள்ளிக்கிழமை காலை பெருந்தொகையான சிங்களயாத்திரிகர்கள்நயினாதீவிற்கு வருகை தந்தனர். இறங்குதுறையில் வந்திறங்கிய யாத்திரிகர்கள் நயினை நாகபூஷணிஅம்பாள் ஆலய முன் கேற்றடியில்வந்து நின்றனர். பௌத்த விகாரைக்கு செல்லப் போகின்றனர் என்று எண்ணினேன். அவர்களோடு வந்த ஒருவயது முதிர்ந்த அம்மா அக்கூட்டத்தில் இருந்து தன்னை மறந்த நிலையில் கலை ஆடியவாறு கண்களில் நீர் மல்க அம்பாள் ஆலய வீதியில் ஓடி வந்தார். அவரைத் தொடர்ந்து அத்தனை மக்களும் சாது, சாது என்று உச்சரித்தவாறு தொழு கையுடன் அம்பாள் ஆலயத்தினுள் பிரவேசித்தனர். கலைஆடிய அம்மா, அம்மாளை நோக்கிச்சமாதானத்தின் மூலம் எங்களை அழைத்து வந்துள்ளாய்! தாயே இது தொடரட்டும்.யுத்தம் எமக்கு வேண்டாம். சமாதானத்தை ஏற்படுத்து. எம்மை அழைத்தமைக்காக உன்னைநமஸ்கரிக்கின்றோம், என்று கூற வீதியில் கூடிநின்ற அனைத்து சிங்கள மக்களும் வயது வித்தியாசம் இன்றிச் சாது, சாது என்று பக்தியோடு வழிபட்டு நின்றனர். விபூதி பிரசாதம் நெற்றியில் இடப்பட்டபின் பௌத்தவிகாரைக்குச் சென்று வழிபட்டபின் மீண்டும் அம்பாள் ஆலயத்திற்கு வந்து உள் வீதியை வலம்வந்து தொழுதகையினராய் வழிபட்டனர்.

மாத்தறை மக்கீன் நோனா

கலை ஆடிய அம்மாவை அணுகி எங்கிருந்துவருகின்றீர்கள் என்றுவினவினேன். தாங்கள் மாத்தறையில் இருந்து வந்துள்ளதாகவும் அங்கிருந்தே பஸ் ஒன்றை வாடகைக்கு அமர்த்திவந்ததாகவும்தனது பெயர் மக்கீன் நோனா என்றும், கணவர் பிள்ளைகள் உறவினர்கள் ஊரவர்கள் என்று அனைவரையும் நாகதீபத்திற்கு அழைத்துவந்ததாகவும், இங்கு படகில்இருந்து இறங்கியதுமே தன்னை அம்பாள் ஆட்டி ஆட வைத்துவிட்டாள் என்றும், சமாதானம் நிலைக்கும். கலங்காதீர்கள்என்றும்கைஅசைத்து அம்மாள் வீதியில் அஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கி விடைபெற்றார்கள்.

சமாதானத்தை எப்பாடு பட்டாலும் பங்கம் வராமல் பாதுகாப்பதில் சிங்களமக்கள் முனைப்பாகவுள்ளனர் என்பதை நயினாதீவிற்கு வரும் சிங்களயாத்திரிகர் மூலமும் அவர்களின்பிரார்த்தனைவழிபாடுமூலமும் காண முடிகின்றது. அரசியல் ஆதாயம் தேடவும்யுத்தத்தின் மூலம் லாபம் தேடவும் சிங்கள பேரினவாதிகள் சமாதானத் தீர்விற்கெதிராக அணிதிரட்ட முனைந்து நிற்கின்றனர். ஆனால் அது நிறைவேறாது என்று நயினாதீவிற்கு வரும் சிங்கள யாத்திரிகர்களும் தென்னிலங்கை முஸ்லிம்களும் கூறுகின்றனர்.

# தலைவர் பிரபாகரனின் தலைசிறந்த முன்னெடுப்புக்களைப்பாராட்டிகடிதம்

## யாழ்.ஆயரால் அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்திற்கு பதிலாக மாற்று வழி ஒன்றினை தெரிவித்து அதனை தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டால் தனி நாட்டுக் கோரிக்கையை மறு பரிசீலனை செய்ய தயாராக இருக்கிறோம் என்ற நிலைப்பாட்டை தோற்றுவித்து சமாதான வழிக்கு தாங்கள் வந்துள்ளது உண்மையிலேயே பாராட்டத்தக்க ஒரு பெரிய விடயமாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பணிகளைப் பாராட்டி யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, அவருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது ; தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வை காணும் முகமாக யுத்த நிறுத்தத்திற்கும் பேச்சுவார்த்தைக்கும் சமாதான நிலைப்பாட்டிற்கும் தாங்கள் இணங்கி தமிழ் மக்கள் வாழ்வில் ஒரு புதிய சகாப்தத்தை தொடக்கி வைத்தமைக்காக தங்களுக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தமிழ் மக்கள் சார்பாக தெரிவிக்கும் முகமாகவே இம்மடலினை எழுதுகின்றோம்.

நோர்வே நாட்டு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பிரதமர் மதிப்பிற்குரிய ரணில் விக்கிரமசிங்கவுடன் தாங்கள் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் நடந்த பல நிகழ்வுகள் தமிழ் மக்கள் மனதில் சமாதானத்துக்கானநம்பிக்கையையும் மகிழ்வையுமே தோற்றுவித்துள்ளது.

அச் சமாதானத்தின் வழியில் ஜனநாயகப் பாதையில் அனைவருக்கும் பங்கு கொடுத்து அனைவர் கருத்துக்களுக்கும் மதிப்பளித்து நடக்க தாங்கள் எடுத்துவரும் நடவடிக்கைகள் துணிச்சலானவை, உண்மையான சமாதானத்துக்கான தேடலுக்கு தேவையானவை. போரையும் போராட்ட நிகழ்வுகளையும் விடுத்து ஜனநாயகத்தையும் அதன் வழிமுறைகளையும் கடைப்பிடிக்க தாங்கள் எடுத்து வரும் முயற்சிகளை பெரிதும் வரவேற்கிறோம்.

ஆசியாவிலேயே பெரிய பத்திரிகையாளர் 'மகாநாடு என வர்ணிக்கப்படும் அண்மையில் நடந்த தங்களின் பத்திரிகையாளர் மகாநாடு தங்களை ஒரு சிறந்த அரசியல் தலைவராகவும் இனங்காட்டியுள்ளது.

பாதை திறப்பு தமிழ், முஸ்லிம் கட்சிகளுடனான சந்திப்பு, பத்திரிகையாளர் மகாநாடு எனத் தொடரும் நிகழ்வுகள் எல்லாம் தங்களின் தலைமைத்துவத்தையும் தமிழ் மக்களின் சுபீட்சமான எதிர்காலத்தையுமே கோடிட்டுக் காட்டுகின்றன.

தமிழ் மக்களுக்காக தாங்கள் செய்யும் அனைத்து செயற்பாடுகளையும் நடவடிக்கைகளையும் தியாகங்களையும் வெகுவாகப் பாராட்டி வரவேற்று தங்கள் நல்லபணி தொடர இறையாசீர் வேண்டி வாழ்த்தி நிற்கிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ)

# முஸ்லிம்கள் மீளகுடியேற்றம் விருப்பத்தை அறிய கருத்துக் கணிப்பு

(கொழும்பு)

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை மீள் குடியேற்றுவது தொடர்பாக விருப்பங்களை அறிவதற்காக விசேடசெயல் திட்டம் ஒன்றை வன்னிப்புனர் வாழ்வு அமைச்சு அமுல் படுத்தியுள்ளது.

அகதிகள் தற்காலிகமாகத் தங்கியுள்ள பிரதேச செயலக பிரிவுகள் தோறும் இதற்கான கருத்துக் கணிப்பு நடத்தப்

(2ம் பக்கம் பார்க்க)

## இன்று ஒரு தகவல்

# பெற்ற சித்திகள் எவையும் கடவுளைக் காட்டமாட்டா

சாது ஒருவர் இருந்தார். அவர் வாழ்ந்த தவவாழ்க்கை காரணமாகப் பல சித்திகள் அவருக்குக் கிடைத்தன. சித்திகளைப் பெற்றுவிட்டதனால் அவருக்கு எப்படியோ தற்பெருமை வந்துவிட்டது. ஆனால் அந்த சாது இயல்பிலேயே நல்லவராகவும், உண்மையான தபஸ்வியாகவும் இருந்தார். பல அரிய நற்குணங்கள் அவரிடம் இருந்ததால் அந்தச் சாதுவின் தற்பெருமையைப் போக்கி அவரை நல்வழிப்படுத்த இறைவன் திருவுள்ளம் கொண்டார். ஆதலால் சர்வேசுவரன் ஒரு சன்னியாசியின் வடிவில் சாது இருந்த இடத்திற்குச் சென்றார். அவரிடம் 'சுவாமி தாங்கள் அநேகம் சித்திகளைப் பெற்றிருப்பதாகக் கேள்விப்பட்டேன். உங்களைக் காண வந்தேன்' என்று சொன்னார்.

சாது தன்னைக் காண வந்த சன்னியாசியை மரியாதையுடன் வரவேற்று உட்காரும்படி கேட்டுக் கொண்டார். அப்போது அவர்கள் இருந்த வழியாக ஒரு யானை போய்க் கொண்டிருந்தது. அதைப் பார்த்த சன்னியாசி சாதுவிடம் 'சுவாமி! தாங்கள் விரும்பினால் இந்த யானையைக் கொல்ல முடியுமா?' என்று கேட்டார். அதற்கு சாது 'ஓ, அதை என்னால் செய்ய முடியும்' என்று பதில் சொல்லிவிட்டு, ஒரு பிடி மண்ணைக் கையில் எடுத்தார். பிறகு அந்த மண்ணை மந்திரித்து யானையை நோக்கி வீசினார். உடனே அந்த யானை வேதனைப்பட்டுத் துடிதுடித்துக் கீழே விழுந்தது. அந்த நிமிடமே அதன் உயிர் போய்விட்டது.

இதைச் சன்னியாசி கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். 'ஆகா! தங்களுடைய சக்தி தான் எவ்வளவு அபாரமானது! எவ்வளவு சுலபமாகத் தாங்கள் யானையைக் கொன்றுவிட்டீர்கள்' என்று சொல்லிப் பாராட்டினார். இப்படி சன்னியாசி புகழ்ந்ததும் சாதுவுக்கு அளவில்லாத மகிழ்ச்சி ஏற்பட்டது. அவருக்குப் பெருமை தாங்க முடியவில்லை. மகிழ்ச்சியும் பெருமையும் பொங்க அவர் புன்சிரிப்புச் சிரித்தார். பிறகு சன்னியாசி 'நல்லது, இறந்து போன யானையை மீண்டும் பிழைக்கச் செய்ய முடியுமா? என்று மறுபடியும் கேட்டார். அதற்கு நமது சாது உடனே 'ஆமாம், அதையும் என்னால் செய்ய முடியும்' என்று பதில் சொன்னார். முன்பு போலவே ஒரு பிடி மண்ணைக் கையில் எடுத்து மந்திரித்தார். பிறகு அதை விழுந்துகிடந்த யானையின் மேலே வீசினார். மறுகணமே யானை அசைந்து கொடுத்தது. உயிர் பெற்று எழுந்தது. இதையெல்லாம் பார்த்த சன்னியாசி கேட்டார்.

'சுவாமி! தங்களுடையசக்தி உண்மையிலேயே அபாரமானது தான் அதில் ஒன்றும் சந்தேகம் இல்லை. ஆனால் உங்களை நான் ஒரு கேள்வி மட்டும் கேட்க விரும்புகிறேன். இப்போது தாங்கள் யானையைக் கொன்றீர்கள். பிறகு மீண்டும் அதை உயிர் பிழைக்கச் செய்தீர்கள். என்றாலும் இதனால் தங்களுக்குக் கிடைத்த நன்மை என்ன? அதன் மூலம் தங்களுக்கு எப்படிப்பட்ட ஆன்மீக முன்னேற்றம் கிடைத்தது? பகவானை அடைய இதுஉதவி செய்ததா? என்று கேட்டுவிட்டு அங்கிருந்து மறைந்து போனார்.

நன்றி
ஸ்ரீராம கிருஷ்ணர் சொன்ன கதைகள்.

## சரசாலை வடக்கில் கண்ணிவெடி அகற்றும் பணி தொடர்கிறது

(தென்மராட்சி)

அமெரிக்க நிபுணர்களின் தலைமையில் வந்துள்ள கண்ணிவெடி, மிதிவெடிகளை அகற்றும் குழுவினர், சரசாலை வடக்கில் தங்கியிருந்து தமது பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இரு அமெரிக்கர்கள்உட்பட 24 மொஸாம்பிக் நாட்டவர்கள்இக்குழுவில் அடங்கியுள்ளனர்.

இவர்களுடன் நான்கு மோப்ப நாய்களும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதுகுறிப்பிடத்தக்கது. (உ-77)

## கோப்பாயில் பாதீனியம் ஒழிப்பு நடவடிக்கை விரைவில் ஆரம்பமாகும்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்ப்பகுதியில்பாதீனியம் ஒழிப்பு நடவடிக்கைவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேற்படிபாதீனியம் ஒழிப்பு நடவடிக்கையை யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் விவசாயத்திணைக்களமும் இணைந்து மேற்கொள்ளவுள்ளன.

கோப்பாய்ப்பகுதியில் தற்பொழுது பாதீனியம் விரைவாக பரவிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-19, 2)

## காலாவதியான முக்கூட்டுமா புத்தூரில் விநியோகம்

(புத்தூர்)

புத்தூர் மத்திய மருந்தகமூடாக விநியோகிக்கப்பட்ட முக்கூட்டுமா பாவனைக்கு உகந்ததாக இல்லையென சம்பந்தப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

போஷாக்கினைக் கருத்தில் கொண்டு வழங்கப்படும்இந்த முக்கூட்டுமா காலாவதியானதாகவும், புழுக்கள் நிறைந்ததாக காணப்படுவதாகவும்,

நோய்கள் ஏற்படுவதற்கு இது காரணமாக அமைந்துவிடுமோ என்ற அச்சநிலை பாவனையாளர் மத்தியில் ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. (உ-235)

# புலிகளின் பிரமுகர்கள் விரைவில் எதிர்க்கட்சித் தலைவரைச் சந்திப்பர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பிரமுகர்கள் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசவுள்ளதாக கொழும்பு செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெறவுள்ள இச்சந்திப்பில் விடுதலைப் புலிகளின் தரப்பில், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வனும் கலந்து கொள்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சமாதான நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் புலிகளின் அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக தமிழ்ச்செல்வன் இச்சந்திப்பின் போது எடுத்து விளக்கவுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவின் இந்த புலிகளுடனான முதலாவது சந்திப்புத் தொடர்பாக அரசியலாளர்கள் பலவித கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

சமாதான நடவடிக்கை தொடர்பான, இவரின்போக்கு மற்றும் சிறுபான்மை இனத்தவரின் பிரச்சினைகளை விளங்கிக் கொண்ட விதம் ஆகியவை தொடர்பாக பலரிடமும் பாராட்டுக்களைப் பெற்றுவரும் எதிர்க்கட்சித் தலைவருடன் சந்திப்பு முக்கியமானதொன்றெனவும்,

இது சமாதான நடவடிக்கையில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் அவர்கள் தெரிவித்துளனர். (உ-9)

## இராசிபலன்

27-4-2002
(சித்திரை 14, சனி)
பூரணை மு.ப.9 24 வரை
சுவாதி மு.இ.9.31 வரை
ராகுகாலம் 8.59–10. 29
நல்ல நேரம் 2.59-4.29
அமிர்த சித்தம்

**மேடம்**
முயற்சி கைகூடும், நண்பர்கள் சந்திப்பு,விருந்துபசாரம், தனவரவு.

**இடபம்**
காரிய நன்மை, ஆரோக்கியம், தொழில் விருத்தி, சந்தோசமான சம்பவம்.

**மிதுனம்**
தாழ்ந்த சுபாவம், குடும்பக் கவலை,காரிய தாமதம், சிறு வியாதி.

**கடகம்**
கல்விச்சிறப்பு,ரோக பயம், அற்பர் உறவு, முயற்சி தாமதம்.

**சிங்கம்**
வாக்குப் பலிதம், பொருள் சேர்க்கை,இனிய சம்பவம், காரிய அனுகூலம்.

**கன்னி**
கௌரவக் குறைவு, வாக்கு கலகம்,காரிய தாமதம், வீண் செலவு.

**துலாம்**
பெரியோர் ஆதரவு, சயன சுகம், புதிய பொருள் சேர்க்கை,முயற்சி ஜெயம்.

**விருச்சிகம்**
சுப செலவு, சயனசுகக் குறைவு, கோபப்படுதல், காரிய தாமதம்.

**தனுசு**
தனலாபம்,நண்பர்கள் சந்திப்பு,காரிய அனுகூலம், கீர்த்தி.

**மகரம்**
அதிக பிரயாசை, அதிகாரம், உற்சாகம், காரிய சித்தி.

**கும்பம்**
கட்டுப்பாடு, வீண்பயம், முயற்சி தாமதம், சகோதரர் உதவி.

**மீனம்**
உடல் வியாதி , வீண் தொல்லை,முயற்சி தாமதம், தொழில் கஷ்டம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## தானியங்கி பணக் கொடுப்பனவு சேவை விரைவில் ஆரம்பமாகும்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கிக்கிளையில் ஆரம்பிக்கப்படவுள்ள தானியங்கி பணக் கொடுப்பனவுசேவைக்கான(ஏ.ரி.எம்.) இயந்திரம், மின்பிறப்பாக்கிகள், குளிரூட்டிகள் மற்றும் ஆவணங்கள் யாவும் தரைவழிப்பாதையூடாக கடந்த புதன்கிழமை கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளன

இ மெசின் விரைவில் பொருத்தப்பட்டு அதன் சேவைகள் ஆரம்பிக்கப்படும் எனஉதவிப் பொது முகாமையாளர் எஸ் இளம்பிறைநாதன் தெரிவித்தார். (உ-77)

## இளைஞர்சேவை மன்றத்தில் கல்வி, கலை பயிற்சிகள்

(மந்திகை)

வடமராட்சி வடக்கு பிரதேச இளைஞர் சேவை மன்றம் ஜூன்மாதம் தொடக்கம இளைஞர், யுவதிகளுக்கு கல்வி, கலைத்துறைசார்ந்த பயிற்சிகளை அளிக்கவுள்ளது.

தேசிய இளைஞர்சேவை மன்றம் இவற்றிற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

மேற்படி பயிற்சிதொடர்பான வகுப்புகளில் தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆங்கிலம், சிங்களம், மிருதங்கம், வயலின், வாய்ப்பாட்டு ஆகிய பாடங்கள் இடம் பெறும் என்று வடமராட்சி வடக்கு பிரதேசசேவை மன்றத்தின் தலைவர் கே. வரதகுமார் தெரிவித்தார்.

இப்பயிற்சிகளைப் பெற விருப்புவோர் தமக்கு விண்ணப்பிக்குமாறு மேலும் அவர் தெரிவித்துள்ளார். (எ-23)

## வெளியூர் இறைச்சிக் கோழிகள் வரவு உள்ளூர்க் கோழிப் பண்ணையாளர் பாதிப்பு

(ஈச்சமோட்டை)

வெளியிடங்களில் இருந்து குடாநாட்டுக்கு இறைச்சிக் கோழிகள் எடுத்துவரப்படுவதால், குடாநாட்டுக் கோழிப் பண்ணையாளர்கள் பாதிப்படைந்து வருகின்றனர்.

தரைப்பாதையூடாக எடுத்துவரப்படும் இறைச்சிக் கோழிகள் 180 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதால், மக்கள் அவற்றை வாங்குவதில் நாட்டம்காட்டிவருகின்றனர்.

இந்நிலையில் கூடிய விலைக்குக்கோழிக் குஞ்சுகளைக் கொள்வனவு செய்து, அவற்றுக்கு விலைகூடிய கோழித்தீவனங்களைப்போட்டு வளர்க்கின்ற தம்மால் இவ் விலைக்குக்குறைவாக கோழிகளை விற்க முடியாதிருப்பதாக அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர் (உ-59)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக்காட்சித் தொடரில், லியோடால்ஸ்டாய் (Leotolstoy) எழுதிய ''போரும சமாதானமும்'' (Peace and War) திரைப்பட வடிவத்தின் இறுதிப்பாகம் இன்று சனிக்கிழமை மு.ப. 10.00மணிக்குபுவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில்எவரும் கலந்துகொண்டு பயன் பெறலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ)

## சிந்தனைக்கு விருந்து

### நிகழ்ந்தவை கனவாகட்டும்

காசீமோ டப்துல் லாவும்
கதீஜாவும் ஆமி னாவும்
பாசமாய் வாழ்ந்த மண்ணின்
பழைமையை நினைந்து மிக்க
ஆசையாய் வந்துள் ளார்கள்
அவர்களை ஆத ரித்து
நேசமாய் உறவு கொள்வோம்
நிகழ்ந்தவை கனவா கட்டும்.

- பழையவன்

# தந்தை செல்வா வழி வந்தவர்கள் என்றும் எமக்காக குரல் கொடுப்பார்கள்

## தந்தை செல்வா நினைவு நிகழ்வில் ஹமீர்

(யாழ்ப்பாணம்)

தமிழர், முஸ்லிம்கள் என்ற பேதமின்றி தமிழ் பேசும் மக்கள் என்ற ரீதியில் அனைவர்க்காகவும் அகிம்சை வழியில் போராடியவர் தந்தைசெல்வா சிங்கள பேரின வாதத்திற்கெதிராக முஸ்லிம் மக்களுக்காக குரல் கொடுத்த பெரியார் இவர் என்று கூறிக் கொள்வதில் நாம் என்றும் பெருமையடைகிறோம்.

தந்தை செல்வாவின் நினைவஞ்சலிக் கூட்டம் நேற்றைய தினம் தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்தில் யாழ். மாவட்டப்பாராளுமன்றஉறுப்பினர் மாவை சேனாதிராசா தலைமையில் நடைபெற்ற போது நிகழ்வில் கலந்து கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் மாநகரசபை உறுப்பினர் எஸ். ஹமீர் உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

நாம்இடம்பெயர்ந்து சென்ற நிகழ்வுகளை கனவாகவே மறந்து விட்டோம்.

தம்பி பிரபாகரன் எங்களைச் சொந்த மண்ணுக்கு அழைத்ததை நாங்கள் வரவேற்கின்றோம்.

முன்பு போன்று ஓர் இனம் என்ற ரீதியில் ஒன்றாக நன்றாக இந்த யாழ்ப்பாண மண்ணில் நாங்கள் வாழ வேண்டும் இதுவே எங்களுடைய அவா.

முஸ்லிம்களாகிய நாம் தமிழ்ச் சகோதரர்களுடன் ஒட்டி வாழ விரும்பினோமேயன்றி என்றுமே வெட்டி வாழ எண்ணியதில்லை.

நாங்கள் சகோதரர்கள் அன்புக்குரியவர்கள் இதை எந்தச் சக்தியாலும் பிரிக்க முடியாது.

தந்தை செல்வாவின் வழி வந்தவர்கள் எங்களுக்காக எப்போதும் குரல் கொடுப்பார்கள் என்பதில் எந்தவித ஐயமும் எமக்கு இல்லை என்று குறிப்பிட்டார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினரும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் தலைவருமான சி. வி. கே. சிவஞானம் இந் நிகழ்வில் உரையாற்றுகையில்,

சமஷ்டி சாத்தியம் இல்லை என்றால் தனிநாடு தேவை. தந்தை செல்வாவின் இந்த வார்த்தைகளை இன்று நடைமுறையில் காண்கிறோம்.

பாதை திறந்த பின்னர் எங்கள் மண் வர்த்தக மையமாகின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

நாங்கள் சுகந்திரத்தை தன்னாட்சியை சுய ஆட்சியை விரும்புகின்றோம்.

தந்தை செல்வாவின் உணர்வும் தேசியத் தலைவரின் உணர்வும் எங்களது உணர்வும் ஒன்றுபட்டவையாக உள்ளன.

'தமிழ்த் தேசியம்' என்பதை உருவாக்கிய பெருமை தந்தை செல்வாவுக்கே உண்டு.

தமிழர்களின் உரிமைகளுக்காக இன்றும் குரல் கொடுக்கிறோம் என்றும் குரல் கொடுப்போம் என்றார்.

இந் நிகழ்வில் முஸ்லிம் பிரதிநிதிகள் மதத் தலைவர்கள் தமிழ்க்கட்சி உறுப்பினர்கள் மாநகரசபை உறுப்பினர்கள்பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(உ-6,59)

## இன்று தீர்த்தம்

(சங்கானை)

சண்டிலிப்பாய்ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயதீர்த்த உற்சவம் இன்று இடம்பெறவுள்ளது. (உ-123)

## கசிப்பு உற்பத்தி

(சங்கானை)

சங்கானைமேற்குப்பகுதியில் கசிப்பு உற்பத்தி அதிகரித்திருப்பதாக அப்பகுதி மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (உ-123)

## வீதி விபத்து அதிகரிப்பு

(கிளிநொச்சி)

இடம்பெயர்ந்த மக்கள் பெருமளவில் மீளக்குடியமர்வுக்காக கிளிநொச்சிநகரப்பகுதியை நாடுவதையடுத்தும் அப்பகுதி வீதிகள் சேதமாகியுள்ளதாலும் கிளிநொச்சி நகரப்பகுதியில் வீதிவிபத்துக்கள் அதிகரித்துவருவதாக தெரியவருகிறது. (உ)

## சமாதான நடவடிக்கைகளுக்கெதிராக

# மூன்று கட்சிகள் கூட்டாக எதிர்ப்பிரசாரத்தில் ஈடுபட திட்டம்

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளுக்கெதிராகவும், நாடு பிரிக்கப்படுவதற்கெதிராகவும் மூன்று அரசியற்கட்சிகள் கூட்டாக மே மாத நடுப்பகுதியில் எதிர்ப்புப்பிரசாரம் நடத்தவிருக்கின்றன.

சிஹல உறுமய, ஸ்ரீ. ல. சு. கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியன இணைந்து மே மாதம் 14 ஆம் திகதி அநுராதபுரத்தில் பொதுக் கூட்டமொன்றையும் நடத்தவிருக்கின்றன.

1985 ஆம் ஆண்டு இதே நாளில் ஸ்ரீ மகாபோதி விஹாரை மீது தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது அதனை நினைவு கூரும் விதமாகவே இந்தக்கூட்டம் நடத்தப்படவுள்ளது.

இதேவேளை, இலங்கையரசுக்கும் புலிகளுக்குமிடையே தாய்லாந்தில் நடைபெறவுள்ள பேச்சுக்களுக்கு இடம் கொடுக்கவேண்டாமென்று இக்கட்சிகள் மூன்றும் தாய்லாந்து அரசை கேட்டுக் கொள்ளவிருப்பதாகவும் அறியப்படுகிறது.

அத்துடன், இக்கட்சிகள் சமாதான நடவடிக்கைகளில் கலந்துகொள்ளக் கூடாது என இந்தியாவைக் கோரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## பிலிப்பைன்ஸ் குண்டுவெடிப்பு சந்தேகத்தின் பேரில் மூன்றுபேர் கைது

(மணிலா)

பிலிப்பைன்ஸில் அண்மையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்குக் காரணமானவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தெற்குப் பிலிப்பைன்ஸில் 15 பேரைப் பலிகொண்ட குண்டுவெடிப்பிற்கு அபுஷாகிப் கெரிலாக்கள் உரிமை கோரியதையடுத்து இடம்பெற்ற தேடுதல் வேட்டையில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இடத்தில் இருந்து 4 கிலோ எடையுள்ள வெடிமருந்துப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (உ-7)

## தரமற்ற பாண் விற்பனை

(மந்திகை)

வடமராட்சிப் பகுதிகளில் தரமற்ற பாண் விற்பனை செய்யப்படுவதாகப் பொது மக்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறை, வியாபாரி மூலை, அல்வாய் பகுதிகளிலேயே நிறை, தரம் குறைந்த பாண் பெருமளவில் விநியோகிக்கப்படுவதாக தெரிய வருகிறது. (உ- 23)

## பாரசீக வளைகுடாவில் பயங்கரவாத அச்சுறுத்தல் அமெரிக்கா எச்சரிக்கை

(வாஷிங்டன்)

பாரசீக வளைகுடா மற்றும் அரபிக் குடாப்பகுதியில் பயங்கரவாத அச்சுறுத்தல் இருந்து வருவதாக அமெரிக்கா எச்சரித்துள்ளது.

அப்பிரதேசங்களில் உள்ள அமெரிக்க நிலையங்கள் மற்றும் அமெரிக்க பிரஜைகள் மீது பயங்கரவாதத்தாக்குதல் இடம் பெறலாம் என்று சந்தேகிக்கப்படுவதாகவும்,

இத்தாக்குதல்களை தனி ஒரு நபரோ அல்லது குழுவோ நடத்த திட்டமிட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இராஜாங்க அலுவல்கள் செயலகம்விடுத்த அறிக்கையில் இதுதொடர்பாக தெளிவுபடுத்திக் கூறப்பட்டுள்ளது. (உ-7)

## ஜே. வி. பி. கொள்ளையடித்த

# அரைத்தொன் தங்க நகைகளை ஏலம் விட அமைச்சரவை தீர்மானம்

(கொழும்பு)

1980 களில் இடம்பெற்ற வன்முறைகளின் போது மக்கள் விடுதலை முன்னணியால் கொள்ளையடிக்கப்பட்ட அரைத்தொன் தங்க ஆபரணங்களை ஏலம்விட அமைச்சரவை தீர்மானித்துள்ளதாககிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு படையினரால் மீட்கப்பட்ட இந்த ஆபரணங்கள் தற்போது திறை சேரியிடம் உள்ளது.

வரவு செலவுத்திட்டத்தில் பற்றாக் குறையாக இருக்கும் தொகையை ஈடு செய்யும் வகையிலேயே இதை ஏலத்திலிட அரசு தீர்மானித்துள்ளதாகவும்.

இவை மிகவும் பெறுமதி வாய்ந்தவை யென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-95)

## சந்தன கடத்தல் வீரப்பன் விரைவில் கைதாவார் ஜெயா உறுதிமொழி

(புதுடில்லி)

சந்தனக்கடத்தல் வீரப்பன் விரைவில் கைதாவார் என தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் கடந்த புதன்கிழமை உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தி.மு.க. ஆட்சிக்காலத்தின் போது சந்தனக் கடத்தல் வீரப்பனை பிடிக்க வேண்டும் என்ற அரசியல் உறுதிப்பாடு இருக்கவில்லை எனத் தெரிவித்த அவர்,

நாட்டின் பல்வேறு தீவிரவாத செயல்களுக்கு உதவியாகவும், உந்து சக்தியாகவும் இருந்து வரும் வீரப்பன்தனது ஆட்சிக்காலத்திலேயே கைது செய்யப்படுவார் எனவும் உறுதியுடன் தெரிவித்துள்ளார். (உ-8)

## சமாதானம் தொடர்பான

# ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் நிலைப்பாடு விரைவில் அறியவரும்

(கொழும்பு)

இப்பொழுது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான நடவடிக்கைகள் தொடர்பான தனது நிலைப்பாட்டை இன்னும் சிலதினங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அறிவிக்கவிருக்கின்றது.

சமாதான நடவடிக்கைகள் தொடர்பான விபரங்களை ஆராய்ந்து வந்த நால்வர் கொண்ட குழு அதன் அறிக்கையை கட்சியின் தலைவி திருமதி குமாரதுங்காவிடம் அவர் இந்தியா செல்வதற்கு முன்னமேகையளித்திருந்தது.

இது தொடர்பாக ஜனாதிபதி தனது கருத்துக்களை கூறியதும்கட்சி தனது நிலைப்பாட்டை நாட்டுமக்களுக்கு அறிவிக்கும் என்று மேற்படி குழுவுக்கு தலைமை தாங்கியவரானடபிள்யூ.டீ.ஜே.செனவிரத்ன எம்.பி.தெரிவித்துள்ளார்.

குழுவின் ஏனைய அங்கத்தவர்களாக நிமால் ஸ்ரீபாலடீசில்வா அத்தாவுட செனவிரத்ன, றெஜினால்ட் குடார ஆகியோர் உள்ளனர்.

இதேவேளை பொ.ஐ.முன்னணியின்பங்காளிகளான இலங்கைச் சமசமாஜக்கட்சியும், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும் சமாதானத்திட்டத்திற்கு தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளன. (உ)

## குடும்ப விபரம் சேகரிப்பு

(சங்கானை)

பண்டத்தரிப்பு பிரான் பற்று ஜே/ 147 கிராம அலுவலர் பிரிவிலுள்ள குடும்பங்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

சம்பந்தப்பட்ட மக்களை குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை என்பவற்றுடன் நேரில் வந்து தங்கள் விபரங்களைப் பதியுமாறு சம்பந்தப்பட்ட கிராம அலுவலர் அறிவித்துள்ளார். (உ- 123)

# தாக்குதல் நடத்த திட்டமிட்டனராம் 2 பலஸ்தீனர் ஜேர்மனியில் கைது

(பேர்ள்)

ஜேர்மனியில் பயங்கரவாதத் தாக்குதலை நடத்த திட்டமிட்டுவந்தனர் என்ற சந்தேகத்தின்பேரில் இரண்டு பேரை ஜேர்மனிய அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

மேற்படி இரண்டுநபர்களும் பலஸ்தீனர்கள்என்று விசாரணைமூலம் தெரியவந்துள்ளது.

கடந்தவாரம், ஜேர்மன் உல்லாசப பயணிகள் விடுதியில் இடம்பெற்ற பெற்றோல் குண்டுத் தாக்குதலின் பின் இடம்பெற்ற விசேட தேடுதல் நடவடிக்கையின்போது இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (உ-7)

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு
-குறள்

# வலம்புரி

## சட்டத்தரணிகளின் கடமை

சமாதானத்தை வலியுறுத்தி, கொழும்பிலிருந்து சட்டத்தரணிகள் குழுவொன்று யாழ்ப்பாணம் வந்துள்ளது. அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தையடுத்து, சமாதானக் குழுக்கள் தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் வருவது சமகால நிகழ்வாக இருக்கிறது.

மரதனோட்டம், சைக்கிளோட்டம் என்பனவும்யாழ்ப்பாணத்தை வந்தடைந்த செய்திகள்.

இதில் கொழும்பு சட்டத்தரணிகள் யாழ்ப்பாணம் வந்திருப்பது மிகவும் முக்கியமான ஓர் அம்சமாகும். இலங்கையின் அரசியலில் - பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தில், முக்கிய இடங்களை வகித்தவர்கள் சட்டத்தரணிகளே, குறிப்பாக இலங்கையின் அரசியலைத் தீர்மானிப்பவர்களாக தென்னிலங்கை சட்டத்தரணிகள் விளங்கியுள்ளனர்.

எனவே யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள சட்டத்தரணிகளின் ஆத்மார்த்தமான நோக்கம் -இலக்கு சமாதானமெனில் அவர்களுக்குச் சில தார்மீகக் கடமைகள் உண்டு. வெறுமனே தார்மீகக் கடமை என்பதைவிட ஒருவகையிலான பிராயச்சித்தக் கடமை என்றும் கூறலாம்.

அதாவது செய்யாத குற்றத்திற்காக வருடக்கணக்கில் சிறையில் வாடுகின்ற அப்பாவித் தமிழ்க் கைதிகளின் விடுதலையில் தென்னிலங்கை சட்டத்தரணிகள் கூடிய கவனமெடுத்து அவர்களின் விடுதலைக்கு உதவவேண்டும்.

அவ்வாறு தமிழ்க்கைதிகளின்விடுதலைக்கு தென்னிலங்கை சட்டத்தரணிகள் உதவுவார்களாயின் அஃது சமாதான நோக்குடன் யாழ்ப்பாணம் வந்ததைவிட கனதியுடையதாக இருக்கும்.

பொய்க் குற்றச்சாட்டின் பேரில் அப்பாவித் தமிழ் இளைஞர்கள், யுவதிகளை சிறைக்குள் தள்ளுவதற்கு ஏதோஒரு வகையில் சிங்கள இனசட்டத்தரணிகள் உதவியாக இருந்துள்ளனர்.

நீதியை - சட்டத்தை இனமொழி வேறுபாடு இன்றி எடுத்துரைக்க வேண்டிய சட்டத்தரணிகள் அதிலிருந்து விலகுவது தர்மமன்று. எனவே நன்நோக்கோடு சமாதானத்தை வலியுறுத்தி யாழ் வந்த சட்டத்தரணிகள் தமிழ்இளைஞர்களின்விடுதலைக்கு உதவுவது மிக மிக அவசியமாகும்.

# கலைகலைக்காகவல்ல ஆன்மீகத்திற்கும் தான்; என்பதைக் "கல்வாரியாகம்" வெளிப்படுத்தியது

## திறனாய்வுக் களம்

எம். எஸ். எஸ். கீர்த்தி

நம் பாவங்களை அவரே சுமந்தார். நாம்பாவங்களுக்கு இறந்து நீதிக்காக வாழ்வதற்கே என்ற மகுடத்தைமுன்னிறுத்தி கல்வாரியாகம் ஆற்றுகை செய்யப்பட்டது. கிறிஸ்தவ மக்களின் தவக்காலப் பண்டிகை இயேசு கிறிஸ்து நாதரின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்பவற்றை ஒவ்வொரு மனிதனும் மனத்திருந்தி திருந்திவாழ வேண்டும் என்ற உன்னத நோக்கிற்காக அனுட்டிக்கப் படுவது, இக்காலத்தில் திருப்பாடுகளின் காட்சி மேடையேற்றப்படுவதுமென் மேலும் நோன்புக்குமெருகூட்டுவதாக அமைகிறது.

**எடுத்துரைஞர் பாத்திரம்**

ஈழ நாட்டில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் 1963 ஆம் ஆண்டு முதல் பாஸ்(PAssloN PLAY) என்ற இப்பக்திக் காவியத்தை வெவ்வேறு பெயர்களில் வெவ்வேறு கோணங்களில் மேடையேற்றி வரும் திருமறைக் கலாமன்றம் இவ்வருடம் 'கல்வாரியாகம்' என்ற பெயரில் அளிக்கை செய்தது கடந்த மாதம் 19 ஆம் திகதி முதல் 24ஆம்திகதி வரையான ஐந்து தினங்களும் மாலை வேளைகளில் யாகத்தில் கலந்து கொள்ள வருகைதந்தமக்களால் திறந்த வெளி அரங்கு நிரம்பி வழிந்தது. இயேசுவின் அன்பான வார்த்தைகள் அனைவர் செவிப் பறையிலும் எதிரொலித்த வண்ணமிருந்தன. பிரமாண்டமான காட்சிப் பின்னணிகள் யதார்த்தத்தை அப்படியே பிரதிபலித்தன. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பங்கேற்ற முறைமையும் அவர்களின் பாத்திர அமைவுகளும்கல்வாரி யாகத்தைமேலும் மெருகேற்றின. எடுத்துரைஞர் பாத்திரத்தின் பங்கு இவ்வாற்றுகையைப் பொறுத்த மட்டில் அதிக பிரசங்கித் தனமாகவே பட்டது. அந்த உணர்வுக்குள் ஒன்றிப்போன பார்வையாளருக்கு மேலும் விளக்கங்கள் தேவைப்பட்டிருக்க நியாயமில்லை. இருந்தும் அங்கு கையாளப்பட்ட சொற்கோர்வைகள் உறுதியானதாகவும் சிந்திக்க வைப்பனவாகவும் தத்துவ வார்த்தைகளாகவும் இருந்தன என்றால் அதுமறுப்பதற்கில்லை. காட்சி மாற்றத்திற்காகவும் நடிகர்கள் மீளத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்வதற்கான இடைவெளிக்காகவும் இப்பாத்திரத்தை நெறியாளர் பயன்படுத்திக் கொண்டார்என்றும் கருத இடமுண்டு. மேடையில் காண்பது நிஜமல்ல என்ற நாடக ஆற்றுகையில் போலச் செய்தல் பண்பமைதிக்கும் இந்த எடுத்துரைஞர் பாத்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

**சிறுவிசனம்**

மேலும் நூற்றுக்கும் மேற்பட்ட நடிகர்களின் இணைவில் கல்வாரியாகம் மேடையேறியது. நடிப்பில்தேர்ந்த நடிகர்களுடன் புதியவர்களும் இணைந்து நிகழ்வில் தோன்றியமை கலைவளர்ச்சிக்கும் மன்றத்தின் கொள்கைக்கும் ஒத்து வருவதாகவே இருந்தது. பிரதான பாத்திரமேற்று இயேசுவாகநடித்தவர் உணர்வைக் கொட்டி அற்புதமாகச் செய்திருந்தார். இசை ஆற்றுகையோடு ஒன்றியிருந்தமை குறிப்பிடக்கூடிய தொன்று வேட உடை ஒப்பனைஎன்பன அவரவர் பாத்திர பண்புக்கும் தோற்றத்திற்கும் ஏற்றதாக அமைந்திருந்தன. ஒலி, ஒளி அமைப்பில் இம்முறை சற்று தளர்ச்சியே காணப்பட்டது. சிலஇடங்களில் காட்சிகள் ஆரம்பிக்கு முன்னரே அவ்விடத்திற்குஒளி பாய்ச்சப்பட்டது. வேறுசில காட்சிகளில் நடிகர் தோன்றி உரையாடலை ஆரம்பித்த சில கணங்களின் பின்பே ஒளியூட்டல் செய்யப்பட்டது. இது ஆற்றுகையின் நீடித்த போக்கில் பார்வையாளருக்கு சிறு விசனத்தை உண்டு பண்ணியிருக்கக் கூடும்.

**சமாதான நிலை**

கல்வாரி யாகம் இயேசுவின் பாடுகளுக்கூடாக எமது நிலையையும் பேசியது. நீதி சமாதானம், மனிதம், இன நல்லிணக்கம் சகோதரத்துவம் என்றெல்லாம் காட்சிகளைப் புகுத்தி சிந்திக்க வைத்ததில் நெறியாளர் ஓரளவு வெற்றி கண்டுள்ளார். குறிப்பாக எமது மக்களின் வாழ்வில் சமாதானக்கீற்று தோன்றும் என்று அனைவரும் நம்பியுள்ளஇந்நேரத்தில் அதற்கான அடித்தளக் கருவையும் தவக்கால ஆற்றுகை கொண்டிருக்கத்தவறவில்லை. சென்ற ஆண்டு மேடையேற்றப்பட்ட காவியநாயகனில் இப்பண்பு மேலோங்கிக் காணப்பட்டதை நாடக இரசிகர்கள் உணர்ந்திருப்பர்.

களங்கம், சிலுவை உலா, கல்வாரிப் பாணி, பலிக்களம், கல்வாரிக் கலம்பகம், அன்பில் மலர்ந்த அமரகாவியம், கல்வாரிச்சுவடுகள், சிலுவைச்சுவடுகள், குருதி கழுவிய குவலயம் என்ற பல்வேறு பெயர்களில் வெளிவந்த பக்திப்படைப்புகளில் ஜோன்சன் ராஜ்குமாரின் நெறியாள்கையில் உருவான கல்வாரியாகமும் தனது இடத்தைப் பதிந்துள்ளது எனலாம்.

**அருளுரை**

ஒவ்வொரு வருடமும் ஆற்றுகை ஆரம்பமாவதற்கு முன்னர், அருளுரை இடம்பெறும், இது பார்வையாளர்களை பத்தியின் பக்கம் இழுத்துச் செல்லும். நல்ல சூழலை உருவாக்கும். அரங்கை புனிதப்படுத்தும். பூமி மயங்கும் மாலை வேளையில் மென்மைபோன இசையோடு ஆற்றுகை தொடங்கும். இதைதிருமறைக் கலாமன்ற அரங்கில் தான் அனுபவிக்கலாம். தென்னங்கீற்று தென்றல் தவழ்ந்து வர நடிகர்களின் பேச்சு வானில் எதிரொலிக்கும்.

அருட் திரு. ம. டேவிற் அடிகள், திரு எஸ். எப். சவுந்தரம், செல்வி வயலற் இம்மானுவல் அருள் சகோ செ. அழகேஸ்வரி, அருட் திரு ஞா. பிலேந்திரன் அடிகள் ஆகியோர் இம்முறைதந்த அருளுரைகள் கிறிஸ்தவ மக்களின் மனங்களில்என்றும் அழியாதபொருள் பொதிந்த முத்துக்களாக பதிந்துள்ளன.

கடந்த 40ஆண்டு காலமாக தொடர்ச்சியாக இப்பணியில் ஈடுபட்டுவரும் மன்ற இயக்குநர் மரியசேவியர் அடிகள் ''கலை கலைக்காக''என்று செயற்படாது, ஆன்மீகரீதியான ஒன்றிணைப்புக்கு வழிவகுத்தல், ஒருசமூக கூட்டுறவைப்பேணல், மனிதத்துவ உறவை கலைமூலம் ஏற்படுத்தல், இறைபக்தியை கலைமூலம் ஏற்படுத்தல் எனப்பல நோக்கங்களைமனங்கொண்டு திருப்பாடுகளின் நாடகவரலாற்றில் பல மாற்றங்களை மேற்கொண்டவராக விளங்குகின்றார் பாஸ்என்றால்அது சவிரி முத்துச்சுவாமியின் பாஸ் என்று மக்கள் கூறுமளவிற்கு அதை வெவ்வேறு கோணங்களில் வளர்த்துச் சென்றவர். அதன்மூலம் அவரது ஆலோசனையில் புதுமெருகு பெற்று வரும் திருப்பாடுகளின் காட்சி இனிவரும் ஆண்டுகளில் மேலும் வளர்ச்சிபெற்றுவித்தியாசமான நவீன சிந்தனை மற்றும் கருத்தாங்கங்களை முன்வைக்கவேண்டும் என்று எதிர்பார்த்துகாத்திருப்போம் கலைவழி மூலம் இறைபணியாற்றும் திருமறைக்கலாமன்றத்தின் செயற்பாடுகள் விரிவுபெற கலாரசிகர்கள் வேற்றுமைகளைமறந்து ஓரணிதிரள்வோம்.

## தினசரி தியானம்

### உறுதி

பிணியறியோம் பணிவோம் அல்லோம்.

- அப்பர்

ஸ்தாணுவாய், அசலமாயுள்ள பெரிய பொருளே, எதற்கும் அசையாத, உறுதியான உள்ளம் உடைந்திருப்பதே உன்னை அடைதற்கு உற்ற உபாயம்.

உன்னில் நீ உறுதிகொள். மலையும் அடிமரமும் உறுதிக்குச் சான்றுகளாகின்றன. புயல்காற்றும் மழையும் அவைகளை அசைக்கமாட்டா. நகர்கின்றமணலும் வளைகின்ற கொடியும். அசைகின்ற நாணலும் உறுதியின்மைக்குச் சான்றுகளாகின்றன. மற்றவர்களெல்லாம் மனத்தளர்ச்சி அடையும் போது, தன்னந்தனியனாய் உறுதியுடனிருப்பவனே மனிதன். நெகிழ்ந்த நெஞ்சமுடையோர் பிறர் உதவியைச் சார்ந்திருக்கின்றனர். உறுதிப்பாடுடையவன் மலைபோன்று தன்னில் தானாயிருக்கின்றான்.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

# குற்றவியல் அவதூறு சட்டங்கள் நீக்கப்படும்
## நீதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

குற்றவியல் அவதூறு சட்டங்கள், சட்டக் கோவையில் இருந்து நீக்கப்படவுள்ளதாக நீதிசட்டச்சீரமைப்பு அமைச்சர் டபிள்யூ ஏ.எம். லொக்கு பண்டார தெரிவித்துள்ளார்.

இந்தவகையில் சட்டக் கோவையின் 479 பிரிவில் இருந்து 482 ஆம் பிரிவுவரையான அமைச்சங்கள் நீக்கப் படவுள்ளன. உரியதிருத்தங்கள் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப் படும் என்றும் இது தொடர்பான திருத்தங்கள் வர்த்தமானியில் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுளது.

கருத்துச் சுதந்திரத்தை பாதிக்கும் இச்சட்டங்கள் கடந்த காலத்தில் அரசியல் நோக்கங்களுக்கு பயன்படுத்தப்பட்டதுடன், இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் தொடர்பாக சட்டமா அதிபர் கருத்து தெரிவிக்க முடியும் எனவும் அமைச்சர் லொக்கு பண்டார தெரிவித்தார். (உ-5)

# மர்மத் தீ விபத்தினால் கணனிகள் எரிந்து நாசம்

அரசாங்க அச்சகத்திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் கடந்த புதனன்று அதிகாலை இடம்பெற்ற மர்மத் தீவிபத்தினால் கணனி இயந்திரங்கள் பல எரிந்து நாசமாகியுள்ளன.

தீ ஏற்பட்டதற்கான காரணம் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லையென அரசாங்க அச்சகப்பணிப்பாளர். நெவில் நாணயக்கார தெரிவித்துள்ளார். (உ)

# கருத்தரங்கு

சைவ ஆலயக் கிரிகைகளும் ஆலயபரிபாலனமும் பற்றிய கருத்தரங்கு அருட்கவி சி. வினாசித்தம்பி தலைமையில் இன்று காலை 9.00 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசி உரையினை சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்களும்வாழ்த்துரையினை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் நிகழ்த்தவுளனர்.

ஆலய நிர்மாணம், சைவாலயப் பூஜையில் சிவச்சாரியார் ஆன்மார்த்த பரார்த்த பூஜைநெறி மஹா கும்பாபிசேகம், மஹோற்சவ கிரிகைகள் சைவாலயப் பரிபாலனம் ஆகிய விடயங்கள் பற்றிநிகழ்வில் கருத்துரை இடம்பெறவுள்ளது. (உ-2)



சமாதானத்தை வலியுறுத்தி யாழ் வந்த தென்னிலங்கை சட்டத்தரணிகள் குழுவினருக்கு யாழ் சட்டத்தரணிகள் சங்கம் இராப்போசன விருந்து வழங்கியபோது எடுத்த படம்.

## நீர்கொழும்புச்சிறைக்...

வாகன ஊர்வலம் தொடர்பாக வும், சாகும் வரையிலான உண்ணா விரதம் மேற்கொள்ளுதல் தொடர்பாக வும் சிறைக் கைதிகளால் விடுக்கப் பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:

எங்களது விடுதலை தொடர்பாக அமைச்சர்களுக்கு பல தடவைகள் எழுத்து மூலமாக கோரிக்கைகள் விடுத்தும் அது தொடர்பாக எது விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படாத பட்சத்திலேயே எமது பெற்றோர்கள், உறவினர்கள், நண்பர்கள் வாகன அணி ஊர்வலத்தை மேற் கொள்ளவுள்ளனர்.

எமது விடுதலைக்காக மேற் கொள் ளவுள்ள இந்த ஊர்வலம் அமைச்சர் கள் ஜெயலத் ஜெயவர்த்தனா, ஜோன் அமரதுங்க ஆகியோர்கள் இல்லங் களிற்குச் சென்று மகஜர் கையளிக்க வுள்ளதுடன் நாமும் அன்று முதல் சாகும்வரையிலான உண்ணாவிர தப் போரை ஆரம்பிக்கவுள்ளோம். எம்முடன் சிறையில் இருந்த ஜவன் ரெக்ஸ் (வயது 32) நெருப்புக் காய்ச் சலால் மரணமானதையும் அம் மக ஜரில் கைதிகள் சுட்டிக்காட்டியுள் ளனர். (வ)

## சு.ப.தமிழ்ச்செல்வன்...

உந்து சக்தியாக அமையுமென சட்டத்தர ணிகள் சங்கத்தினர் தமிழ்ச்செல்வ னிடம் கோரிக்கை விடுத்தனர்.

இந்தக் கோரிக்கையினை ஏற்றுக் கொண்ட புலிகளின் அரசி யல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தென் இலங்கைக்கு விஜயம் செய்து எதிர்க்கட்சித் தலைவர், ஏனைய அரசியல்க் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதி நிதி களையும் சந்தித்து சமாதான முயற் சிகள் தொடர்பாக விளக்கிக் கூற வுள்ளதாக உறுதியளித்தார் என சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (த-5)

## சோதனைச்...

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு எடுத்த நடவடிக்கையின் பயனாக ஞாயிற்றுக்கிழமை தவிர் ந்த ஏனைய நாட்களிலும் பொது விடுமுறை நாட்களிலும் ஏ-9 பாதை சோதனைச் சாவடிகள் பிரயாணத்திற்காக திறந்து வைக்கப் பட்டிருக்கும் என்றும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. (வ)

## அரசியல்துறை...

தொடர்ந்து வாழைச்சேனை கஜீ வத்தை சோதனைச் சாவடியுடாக அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு பிரவே சித்த கரிகாலன் மட்டக்களப்பின் தென் பகுதயில் உள்ள பிரதேசமொன் றிற்குச் சென்றதாக அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (த)

## மேலும் 30...

துறை உறுப்பினர்கள் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

# அமைச்சர்கள் பிரபாவை சந்தித்ததில் தவறில்லை

### அமைச்சர் அலுவிகார கருத்து

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலை வர் வே.பிரபாகரனை அமைச்சர்க ளான ஆறுமுகம் தொண்டமான், பி. சந்திரசேகரன், ரவூப் ஹக்கீம் ஆகி யோர் சந்தித்துக் கலந்துரையாடிய தில் எவ்வித தவறுமில்லை.

இவ்வாறு உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் அலுக் அலுவி கார தெரிவித்துள்ளார்.

புலிகளின் தலைவரை அமைச்சர் கள் சந்தித்துப் பேசியது தவறென் றும், அமைச்சர்களுக்கெதிராக நம்பிக்கை யில்லாப் பிரேரணை கொண்டுவரப் பட வேண்டுமென்றும் இனவாதக் கட் சிகள் பகீரத பிரயத்தனம் மேற்கொள் வது தெரிந்ததே.

இந்நிலையில் அமைச்சர் அலுக் மாதளம்பிட்டிய கிராமத்தில் புதிய சனசமூக நிலைய திறப்பு விழாவில் உரையாற்றும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகை யில்:-

19 வருடகால யுத்தக் கொடு மையை அனுபவித்துவிட்ட நாட்டு மக் கள் அனைவருமே சமாதானம் தேவை என்பதை விரும்புகின்றனர். இந் நிலை யில் அரசாங்கம் சமாதான முயற்சி களை மேற்கொண்டு வருகிறது. இம் முயற்சிகளுக்கு அமைச்சர்கள் மூவ ரும் ஆதரவு அளிப்பார்களே தவிர சமா தான முயற்சிக்கு தடையாக இருக் கும் சந்தர்ப்பவாதிகளுக்குத் துணை போகமாட்டார்கள்.

அமைச்சர்கள் மூவரும் புலிக ளின் தலைவரை சந்தித்ததை தவறு என்று எதிர்க் கட்சிகள் கூறுகின் றன. இதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அமைச் சர் அலுக் அலுவிகார மேலும் கூறி னார். (இ)

## நாட்டில்...

கிளிநொச்சியில் எம்மை வரவேற்று உபசரித்தமை நல்லதொரு சகுனமாக அமைந்துள்ளது.

ஆனால் யாழ்ப்பாணம் வந்து நாம் பார்த்தபோது யுத்தத்தினால் ஏற்பட்டிருந்த அழிவுகள் எமக்கு வேதனை அளிக்கக்கூடியதாக உள்ளது. வெளிநாட்டு சர்வதேச உதவிகளுடன் கட்டி எழுப்பப்பட வுள்ள யாழ்ப்பாணத்தை அடுத்த முறை வரும்போது நாம் பார்ப் போம்.

இங்கிருந்து நாம் கொழும்பிற்கு திரும்பும் வழியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந் தித்துப் பேச உள்ளோம்.

ஜனநாயக முறையில் சட்டத் தையும் ஒழுங்கையும் நாம் நிலை நாட்ட புலிகளுடன் நீதிமன்றங்களி னதும் சட்டத் தரணிகளினதும் பங்குபற்றி வலியுத்திப் பேசவுள்ளோம் என்றும் கூறினார்.

இவ்வைபவத்தின்போது பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவினால் வழங்கப்பட்ட சட்டப்புத்தகங்களும், யாழ் சட்டத்தரணிகள் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டன. (வ)

# நிவாரண அரிசியின் விலை உயர்வை உடன் நிறுத்துக

### விஜயரட்ணம் அவசர வேண்டுகோள்

நிவாரணத்துக்கு வழங்கப்படும் அரிசியின் விலை உயர்வை நிறு த்தி வைக்குமாறு கோரி, புனர்வா ழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனாவுக்கு, அவ சர பக்ஸ் கடிதமொன்று நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யாழ் மாநகரசபை உறுப்பினர் செல்லையா விஜயரட்ணத்தால் அனுப் பப்பட்ட அக்கடிதத்தில்,

இடம் பெயர்ந்து வாழும் குடும் பங்களுக்கு வழங்கப்படும் அரிசி யின் விலை உயர்வால், குடாநாட் டில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் பெரிதும் துன்பப்படு கின்றனர்.

இதனால் நிவாரணப்பொருட்களின் விலையை உயர்த்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்வதுடன், இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடிய மர்த்த நடவடிக்கை எடுக்க வேண் டும். தற்பொழுது குடாநாட்டிற்கு முஸ்லிம் மக்கள் வருகை தந்து, தமது இடங்களில் குடியேறி வருவதால், முஸ்லிம் வீடுகளில் தற்காலிகமாக வசித்த தமிழ்க்குடும்பங்கள் வீடுகள் இன்றி தவிக்கின்றனர் என்றும் அக்கடி தத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(இ)

# வெடி கொளுத்துவோரால் யாழ் நகரில் தீ அபாயம்

### யாழ் மாநகர முதல்வர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் நவீன சந்தைப் பகுதிக்குள் அமைந்திருக்கும் வர்த்தக நிலை யங்களுக்குள் இரவு வேளைகளில் இளைஞர்கள் வெடி கொளுத்தி அட்டகாசம். புரிவதால் வர்த்தக நிலையங்கள் தீப்பிடிக்கும் அபாயம் இருப்பதாக யாழ் மாநகர முதல்வர் எஸ்.கந்தையன் எச்சரிக்கை செய்துள்ளார்.

இத்தகைய செயல்களில் ஈடுபடும் இளைஞர்கள் அதனைக் கைவிட்டு சமூகப் பொறுப்புடன் நடந்து கொள்ளுமாறு யாழ் மாந கர முதல்வர் வேண்டுகோள் விடுத் துள்ளார்.

இதே வேளை இச்செயல்கள் கட்டுமீறிச் சென்றால் உரியவர்களை இனங்கண்டு சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இதுகுறித்து யாழ் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்படுகிறது. (இ)

# கொடிகள் அறுக்கப்பட்டன

(ஏழாலை)

மல்லாகம் சந்தியில் கட்டப்பட் டிருந்த சிவப்பு, மஞ்சள் நிறக்கொடி களும், பதாதைகளும் நேற்று முன் தினம் இரவு இனந்தெரியாத குழு வினரால் அறுக்கப்பட்டு தீயிடப்பட் டுள்ளது.

பொங்குதமிழ் நிகழ்வினை முன் னிட்டு மல்லாகம் சந்தியில் கட்டப் பட்டிருந்த பதாதைகளும் கொடிக ளுமே இவ்வாறு வீதியில் வைத்து தீயிடப்பட்டுள்ளது.

இதே வேளை இரு தினங்களி ற்கு முன்னர் சுன்னாகம் பகுதியி லும் இவ்வாறன சம்பவம் இடம் பெற்றுள்ளமை குறிப்படத்தக்கது. (த-12)

## சேட் திருடிய சப் இன்ஸ்பெக்டர் அகப்பட்டார்

(கொழும்பு)

ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக் டர் ஒருவர் பொரளையில் உள்ள புடை வைக் கடையில் சேட் ஒன்றினை யும் 5 ரைகளையும் திருட முயன்ற போது கையும் மெய்யுமாகப் பிடிப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றுள்ளது.(வ)


திருமறைக் கலாமன்றம்

இணைக்கும்

கலைப்பாலம்.2002

ஏப்ரல் 18~27வரை

கொழும்பு~யாழ்ப்பாணம்

தமிழ், சிங்கள, முஸ்லிம் கலைஞர்கள்

கலை யாத்திரையாக வலம் வருகின்றார்கள்

யாழ்ப்பாணத்தில்– இன்று

27-04-2002 சனிக்கிழமை மாலை 6.45 மணி

இடம் : மன்ற அரங்கு

28-04-2002நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 7.00 மணி

இடம் : புனித அன்னாள் ஆலய முன்றல், இளவாலை.

பல்வேறு கலை நிகழ்வுகளுடன்

சிறப்பு நிகழச்சியாக

மூவினக் கலைஞர்கள் பங்கு கொள்ளும்

தரிசனம்

வார்த்தைகளற்ற நாடகம் இடம் பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரவேசம் : இலவசம்

238 பிரதான வீதி, யாழ்ப்பாணம்

T.P.021-2393

website-www.cpateam.org

திருமறைக்கலா மன்றம்.

(C/4012)



புலமைப் பரிசில் - 2002

34வது பரீட்சையில்

கூடிய புள்ளி பெற்றோர்

| | | |
|---|---|---|
| 1. | நி.வாகினி | 161 |
| 2. | ந.பிரணவரூபன் (யா/இ.ஆ.பா) | 159 |
| 3. | க.மயூரன் (கொ/இ.ஆ.பா) | 157 |
| 4. | மோ.ஜனகன் (மானி.விவேகானந்தா) | 157 |
| 5. | தி.வைகுந்தன் | 157 |
| 6. | ப.நர்த்தனன் | 156 |
| 7. | ஆ.றோய் (யா/இ.ஆ.பா) | 155 |
| 8. | அ.கார்த்திகன் | 152 |
| 9. | இ.ஹஸ்தனி (யா/இ.ம.ஆ.பா) | 152 |

BOND யாழ் நகர்

(C/4013)








மில்க்வைற்

MILK WHITE SOAP

மில்க்வைற் சோப் இண்டஸ்றியல்ஸ்

527, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 3541



ராஜா

(யாழ்ப்பாணம்)

2வது வாரமாக

விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த

தமிழன்

TAMILAN

தினசரி 10.30, 2.30, 5.30

(C/3953)



அதபங்கர் சிகிச்சை சம்பந்தமான

கலந்துரையாடல்

அனைத்து நோய் நிலைமைகளுக்குமான அதபங்கர் சிகிச்சை சம்மந்தமான டாக்டர் ரகுறாம் அவர்களின் கலந்துரை யாடல் இன்று (27-04-2002) இரவு 9.30(புதிய நேரம்) மணிக்கு யாழ். சேவையில் நலமாக வாழ்வோம் நிகழ்சியில் இடம்பெறும்.

கதிர் ஜின் ஜாங்

அதபங்கர் கிளினிக்

உரும்பிராய்

(5026)


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.04.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.